விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 027 வள்ளுவர் ஆண்டு 2055 தை 01 திங்கட்கிழமை (15.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829









## பௌத்தத்தை அழிக்க சதித் திட்டம் சட்டத்தை உடன் அமுலாக்குக!

### மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

பௌத்தம் தொடர்பில் தவறான சித்தாந்தம் பரப்பப்படுவதாகவும் பௌத்த தத்து வத்துக்குத் தீங்கிழைக்கும் ஒழுங் 15



## பால்மா விலை அதிகரிக்கும்!


(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அடுத்த வாரம் முதல் அதிகரிக்கப் படும் என பால்மா இறக்கு மதியாளர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.

இதன்படி 400 கிராம்பால்மா பக்கெட் ஒன்றின் விலை 30 ரூபாயி 15

# சம்பந்தரின் ஆதரவு எமக்குத் தேவையில்லை!

## தமிழ் மக்கள் எமக்கு வாக்களிப்பர்
### சம்பந்தருக்கு அமைச்சர் பிரசன்ன பதிலடி



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடயதோ அல்லது இரா.சம்பந்தருடைய ஆதரவோ எமக்குத் தேவையில்லை. தமிழ் மக்களின் ஆதரவு போதுமானது என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)


### பரீட்சை வினாத்தாள் கசிவு
## ஆசிரியர் ஒருவர் அம்பாறையில் கைது

(அம்பாறை)

உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான பாட வினாத்தாள் சமூக வலைத்தளங்களில் கசிந்த விவகாரம் தொடர்பில் அம்பாறையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத் 15

## வட மாகாண ஆளுநரை சந்தித்த ஐ.எம்.எப் பிரதிநிதிகள்



15

### காரைநகர் வியாவிலில்
## தேசிய நல்லிணக்க பொங்கல் விழா இன்று

(காரைநகர்)

தேசிய நல்லிணக்கத் தைப் பொங்கல் விழா இன்று 15ஆம் திகதி காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள் ளது.

தேசிய ஒருமைப்பாடு மற் றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்துடன் வியாவில் வாழ் வர்த்தகர்கள் மற்றும் வெளிநாடு 15

## தமிழர்கள் நிம்மதியுடன் வாழ ராஜபக்ஷக்களே காரணம்
### மகிந்த ராஜபக்ஷ புதுக்கதை



(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் தமிழ் மக்கள் இன்று நிம்மதியுட னும் சபீட்சத்துடனும் வாழ ராஜபக்ஷக்களே காரணம். தமிழ் அரசியல்வாதிகள் தமது சுயலாபத்துக்காக தமிழ் மக்களின் நிம்மதியை குலைக் கின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரி விக்கையில்,

"பிரபாகரன் 15

## கால்வாய்க்குள் விழுந்த இளைஞர்கள் இருவர் பலி
### கிளிநொச்சியில் துயரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதியில் கோவிந்தன் கடைச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கால்வாய்க்குள் விழுந்த இளைஞர்கள் இரு வர் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர் பில் தெரியவருவதாவது,

குறித்த வீதியிலுள்ள நீர்ப் பாசன கால்வாய்க் குள் நேற்றுக் காலை 15

### மயிலத்தமடுவில் பசு வதையை எதிர்த்து
## பட்டிப்பொங்கலன்று யாழில் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டு மயிலத்தமடுவில் பசுக் களுக்கும் காளைகளுக்கும் இழைக்கப்படும் கொடுமை களை கண்டித்து தமிழர்களின் பட்டிப் பொங்கலன்று யாழில் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஒருங்கிணைந்த தமிழர் கட்ட மைப்பு அழைப்பு விடுத்துள் ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MATHS CLASS (PHYSICAL)

◆ தரம் 6 - 11 வரையான மாணவர்களுக்கான கணித தனிப்பட்ட/ குழு வகுப்புக்கள்

[ ஆங்கில மற்றும் தமிழ் மொழி மூலமாக ]

## ONLINE MATHS CLASS (ZOOM)

◆ தரம் 6,7,8 வரையான ஒலிம்பியாட் கணித வகுப்புக்கள்
◆ G.C.E O/L மாணவர்களுக்கான கணித கடந்தகால மாதிரி வினாத்தாள் வகுப்புக்கள்
◆ தரம் 3,4, 5 மாணவர்களுக்கான நுண்ணறிவு (part I) வகுப்புக்கள்

**MR.S.THARSHAN(JP)**

(12 வருட காலத்திற்கு மேற்பட்ட அனுபவமிக்க பாடசாலை ஆசிரியர்)

**077 454 0529**(Whatsapp/ Mobile)

(18636)


## சம்பந்தரின்...

தமிழ் மக்கள் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறிதிகளை நிறைவேற்றினால் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எதிர்வரும் தேர்தலில் ஆதரவளிப்பதாக சம்பந்தன் அன்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நிபந்தனைகளை முன்வைத்து அவருக்கும் அரசுக்கும் ஆதரவு வழங்குவது போல் பாசாங்கு செய்து தங்கள் காரியங்களை நிறைவேற்ற சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிக்கின்றனர்.

அவர்களின் வியூகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிந்த விடயம். எனவே, சம்பந்தனின் ஆதரவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோ ரணில் அரசுக்குத் தேவையில்லை. அபிவிருத்தியில் அதிகூடிய கவனம் எடுத்துச் செயற்படும் ஜனாதிபதி ரணில், அதற்கான இலக்கை அடையும் தருவாயில் அரசியல் தீர்வுக்கான செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து அதிலும் வெற்றி காண்பார். இதற்குத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். ஆந்த அந்தவகையில் தமிழ் மக்களும் எம்மை ஆதரித்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பர் என்றார். (ந-7)


## பணியாளர்கள் தேவை

வயோதிபர்க்ளைப் பராமரிக்க ஆண், பெண் பணியாளர்கள் தேவை.

**சமையல் தெரிந்திருக்க வேண்டும்**

**077 639 9249**

(18631)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியுடன் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

◆ நிலப்பரப்பு
◆ நல்ல சூழல் நன்னீரூற்று
◆ நாவற்குழிச் சந்தியிலிருந்து 3/4 Km
◆ வடமாகாண சபை 300m
◆ கைதடிச் சந்தி 1 Km மெயின்றோட்டுடன் உள்ளது.
◆ விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(18635)

**076 788 0591**
**077 129 4999**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், சுண்டுக்குழி, திருநெல்வேலி, கொக்குவிலினை அண்டிய பகுதிகளில் நல்ல சுற்றாடலில் நாற்சதுர வீடு ஒன்றினை எதிர்பார்க்கின்றோம். ஆயுள்வேத- மருத்துவ நிறுவனம் ஒன்றினை நடாத்துவதற்கு 2 வருடகால ஒப்பந்த அடிப்படையில் தேவை.

Whats app : **076 764 1372**
Call : **077 686 3415**

(18637)

## வாடகைக்கு

கடை, மாடி வீடு, விசாலமான களஞ்சிய அறை, அரிசி ஆலை அமைப்பதற்கான இட வசதி ஆகியன வாடகைக்கு உள்ளது. அமைவிடம் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக உள்ளது.

இருப்பிடம்
யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி - சுளிபுரம்

**077 336 6485**

(C-8135)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# ஸ்ரீ குமரன்
## நகை மாளிகை

*Sree Kumaran Jewellers*

அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகிய தரம் குன்றாத தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்





எமது அன்பர்கள்
ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
தைத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்

இல.74, பிரதான வீதி,
நெல்லியடி.

(C-8136)

No.74, Main Street, Nelliyady.
Tel: 021 226 4465
077 873 3482



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பைப் பெருக்கும் தைத்திருநாள்

## கலாநிதி. ஆறு.திருமுருகன் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

**எமது மண்ணில் நீதியும் நிம்மதியும் நிலவ தைத்திருநாளில் இறைவனை வேண்டுவோம் என தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.**



பொங்கல் விழா ஆசிச் செய்தியை அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சைவத் தமிழ் மக்களின் பண்டிகைகளில் தைப்பொங்கல் விழா முதன்மையானது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனுக்கு பொங்கிப் படைத்து நன்றி சொல்லுவதுடன் பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றிகூறும் நாளாக இந்நாள் கருதப்படுகின்றது.

முற்றத்தில் குடும்பமாகப் பொங்கிப் படைத்து உறவினர் நண்பர்களுக்கு உணவைப் பகிர்ந்து அன்பைப் பெருக்கும் பண்பாட்டு நாளாக தைத்திரு நாளை எம்முன்னோர் காத்து வளர்த்தனர்.

எனவே அனைத்து மக்களும் வீட்டு முற்றத்தில் பொங்கிப் படையுங்கள். எமது பாரம்பரியமான இவ்விழாவைச் சிறப்பாகப் பேணி எமது தலைமுறை பின்பற்ற வழி செய்யுங்கள்.

எங்கள் மண்ணில் நீதியும் நிம்மதியும் நிலவ இறைவனை வேண்டுங்கள். பாடுபட்டு உழைப்பவர்களுக்கு மத்தியில் பணத்தைத் தேட போதைப் பொருட்களில் ஆர்வம் கொள்ளும் அநியாயம் அற்றுப்போக கடவுளை வேண்டுவோம். எங்கள் பாரம்பரியமான பண்பாட்டையும் தாய் மொழியையும் கலைகளையும் காத்திட சகல அமைப்புகளும் பயன் நிறைந்த விழாக்களை ஏற்பாடு செய்து சமூகத்தை ஆற்றுப்படுத்துங்கள்

வைத்தியசாலைகளிலும் சிறைக்கூடங்களிலும் துன்புறும் மக்கள் நன்மை பெற இந்நாளில் பிரார்த்தியுங்கள். அனைத்து அன்பர்களுக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்தினையும் நல்லாசி களையும் தெரிவித்து அமைகிறேன் என அவர் தெரிவித்தார்.(நி-6)

# சர்வதேச இரத்தினக்கல் ஆய்வு மையம் இலங்கையில்

(கொழும்பு)

முதன் முறையாக சர்வதேச இரத்தினக்கல் ஆய்வு மையம் ஒன்று இலங்கையில் ஸ்தாபிக்க ப்படவுள்ளது.

அமெரிக்க மற்றும் சீன நிறு வனங்கள் இணைந்து வழங்கும் முதலீட்டின் ஊடாக பேரு வலையில் இந்த ஆய்வு மையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்காக 10 லட்சம் அமெ ரிக்க டொலர் ஆரம்ப முதலீடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

பேருவளையில், சைனா போட் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை இரத்தினக்கல் கண்காட்சியின் போது இந்த விடயம் அறிவிக்கப்பட்டது. (நி)

# மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு



(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்றைய தினம் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 72.68 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 78.29 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.31 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. (நி)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் விசாலாட்சி



தோற்றம்
29.11.1937

மறைவு
14.01.2024

யாழ். மயிலிட்டி வடக்கு யப்பையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விசாலாட்சி அவர்கள் 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு சுப்பிரமணியம்(திருநெல்வேலி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கனகரத்தினம் (ஓய்வுநிலை அதிபர் - மண்டைதீவு, புங்குடுதீவு மகா வித்தியாலயம்) தனபாலசிங்கம்(குணம் அன் சன்ஸ்-நெல்லியடி), கமலேஸ்வரி(தேவி), காலஞ்சென்ற சறோஜினி மற்றும் புஸ்பலதா(லதா), கனகாம்பிகை(பிரான்ஸ்), காலஞ்சென்ற வரதலிங்கம் மற்றும் துரைரத்தினம்(அதிபர் - சிந்மய பாரதி வித்தியாலயம்), சுவேந்திரன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவநாயகி(ஓய்வுநிலை ஆசிரியர்), இராகேஸ்வரி, இராசேந்திரம், சிவானந்தம்(AT Travels), பாலேந்திரன், ரவீந்திரன், தயாளினி, நிஷாந்தினி (ஆசிரியர் - யாழ்/ இந்துக் கல்லூரி), அனுஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் மனோன்மணி காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னத்தங்கம், கந்தசாமி(ஓய்வு நிலை லிகிதர் - மயிலிட்டி), நாகபூசணி தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தம்பிராசா, தர்மலிங்கம், கணபதிப்பிள்ளை மற்றும் தெய்வேந்திரம் ஆகியோரின் மைத்துனியும் சரண்யா(ஆசிரியர்), ஷம்யுத்தா, துவாரகா(ஆசிரியர்), வாரணன், சரண்ஜன், ஜனனன்(அவுஸ்திரேலியா), சாம்பவன், தயாபரி, வராகன், உஷாயினி (பிரான்ஸ்), சுஜந்தன், கோகுலராஜ் அபிஷாலினி (பிரான்ஸ்), துஷாலினி (லண்டன்), அபிலாஷ்(சுவிஸ்), மனுதர்ஷன் (நீர்கொழும்பு), லோசனன், மிதுனராஜ், பிரிதிவி(பிரான்ஸ்), வர்ஷன்(பிரான்ஸ்), பைரவி (பிரான்ஸ்), தீபிகா(லண்டன்), பானுஷன்(லண்டன்), சண்முகப்பிரியன், பவித்திரன், விருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக்ஷயா, அக்ஷயன், அத்விகா, அயுஸ்மன், அஸ்விகா, சதாக்ஷி ரோசினி, நவீன், சாத்வி ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2024) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கன்னித்தோட்டம்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(18632)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிரடியில் மிரட்டிய மிட்செல் பாக். வீழ்த்தியது நியூசிலாந்து



பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது இருபது -20 போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றுள்ளது. பாகிஸ்தான் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் குறித்த போட்டி ஆக்லாந்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. டாஸ் வென்ற பாகிஸ்தான் பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட்டிங் செய்த கேன் வில்லியம்சன் 57 ரன்கள் சேர்த்தார். நியூசிலாந்து 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 226 ரன்கள் குவித்தது. பேரில் மிட்செல் அதிரடியாக ஆடி 27 பந்தில் 61 ரன்கள் குவித்தார்.

227 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. பாபர் அசாம் பொறுப்புடன் ஆடி அரை சதம் கடந்தார். மற்றவர்கள் விரைவில் அவுட்டாகினர்.

இறுதியில், பாகிஸ்தான் 18 ஓவரில் 180 ரன்களுக்கு ஒல் அவுட்டானது. இதன்மூலம் நியூசிலாந்து 46 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின்மூலம் குறித்த தொடரில் நியூசிலாந்து 1-0 என முன்னிலையில் உள்ளது. ஆட்ட நாயகன் விருது டேரில் மிட்செலுக்கு அளிக்கப்பட்டது. (நி-6)

# ஓரம் கட்டப்பட்ட பிரசித் கிருஷ்ணா

இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கான 16 பேர் கொண்ட இந்திய அணியை பிசிசிஐ அறிவித்தது. ரோகித் சர்மா தலைமையிலான இந்த இந்திய அணியில் 27 வயதான வேகப்பந்து வீச்சாளர் பிரசித் கிருஷ்ணாவிற்கு இடம் அளிக்கப்படாதது அனைவரது மத்தியிலும் கேள்வியை எழுப்பியுள்ளது. இந்நிலையில் இந்திய அணியில் உண்மையாகவே பிரசித் கிருஷ்ணா தேர்வு செய்யப் படாததற்கு என்ன காரணம்? என்பது குறித்த தகவலும் தற்போது வெளியாகி உள்ளது.

அந்த வகையில் தென்னாபிரிக்க தொடரை முடித்து நாடு திரும்பிய பிரசித் கிருஷ்ணா இந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன்னதாக ரஞ்சி கோப்பையில் கர்நாடக அணிக்காக விளையாட விரும்பினார்.

இந்நிலையில் குறித்த தொடரில் விளையாடும்போது போட்டியின் இடையே காலில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு காரணமாக பாதியிலேயே வெளியேறிய அவருக்கு மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு தசைப்பிடிப்பு மட்டும் ஏற்படவில்லை அதோடு சேர்ந்து குவாட்ரை செப்ஸ் என்கிற காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந் துள்ளது. இந்த காயம் சரியாக 6 வாரங்கள் வரை ஆகும் என்ற மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாலே அவர் இந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரில் தேர்வு செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது. (நி-6)




# எம்பாப்பே மீது குறிவைக்கும் லிவர்பூல் அணி

பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் அணியின் நட்சத்திர வீரர் கைலியன் எம்பாப்பேவை தங்கள் அணியில் இணைத்துக் கொள்ள லிவர்பூல் அணி காய்களை நகர்த்தி வருகிறது. இந்த நிலையிலேயே கைலியன் எம்பாப்பே 69 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள லாயல்டி போனஸை கைவிட முடிவு செய்துள்ளார்.



இந்திய பண மதிப்பில் இது சுமார் 730 கோடி என்றே கூறப்படுகிறது. தற்போது 25 வயதாகும் எம்பாப்பேவின் குறித்த அணியுடனான ஒப்பந்தம் ஜூன் மாதம் முடிவுக்கு வருகிறது.

இருப்பினும் அவருக்கு 80 மில்லியன் பவுண்டுகள் அளவுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்பட்டது.

பாரிஸ்செயிண்ட் ஜெர்மைன் அணியில் எம்பாப் பேவின் நிலையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த லிவர்பூல் நிர்வாகம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. தனது தாயாருக்கு மிகவும் பிடித்தமான அணிகளில் ஒன்று லிவர்பூல். அதனாலேயே அதன் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக 2022இல் கைலியன் எம்பாப்பே வெளிப்படையாக தெரிவித்திருந்தார்.

இதனிடையே, லிவர்பூல் அணியில் இருந்து முகமது சாலா சவுதி அணிக்கு செல்வார் என நம்பப்படும் நிலையில் அவருக்கு மாற்றாக எம்பாப்பே அந்த அணியில் இணைத்துக் கொள்ளப்படுவார் என்றே கூறப்படுகிறது. (நி-6)

# உபாதைக்குள்ளான சூர்யகுமார் யாதவ்

சூர்யகுமார் யாதவிற்கு கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக வரும் ஐ.பி.எல் தொடரில் அவர் பங்கேற்பது சந்தேகத்திற்குரியதாக மாறியுள்ளது. தென்னாபிரிக்க அணிக்கு எதிரான கடைசி இருபது -20 போட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சூர்யகுமார் யாதவிற்கு கணுக்காலில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதையடுத்து நடத்தப்பட்ட பரிசோதனையில் சூர்யகுமாருக்கு கணுக்கால் காயம் மிகப் பெரிய அளவில் ஏற்பட்டு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனால் உடனடியாக நாடு திரும்பிய சூர்யகுமார் லண்டன் சென்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டார்.




இந்நிலையில் ஆப்கானிஸ் தான்அணிக்கு எதிரான இருபது- 20 போட்டி தொடரிலிருந்து காயம் காரணமாக சூர்யகுமார் யாதவ் நீக்கப்பட்டுள்ளார். மேலும் இந்த ஆண்டு நடைபெற இருக் கும் ஐ.பி.எல் தொடரிலும் மும்பை இந்தியன்ஸ் அணிக் காக ஆரம்பகட்ட போட்டிகள் சிலவற்றில் விளையாட மாட்டார் என தகவல் தெரிய வந்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 தமிழக கடற்றொழிலாளர்கள்
# காரைநகரில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காரை நகர் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டு இருந்த 12 தமிழக கடற்றொழிலாளர்களை. நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படையினர் கடலில் சுற்றுக் காவல் (ரோந்து) நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே , அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டவர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-33)

# வெளிநாட்டு ஆசைகாட்டி
## பணமோசடி- ஒருவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக சுமார் ஒரு கோடி ரூபாய் பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார். நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி அல்வாய் பகுதியை சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, யாழ்ப்பாண பொலிஸ் பிரிவை சேர்ந்த நபரை இத்தாலி நாட்டுக்கு அனுப்பி வைப்பதாக 23 இலட்ச ரூபாய் பணத்தினை பெற்று மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் , சந்தேகநபர் நெல்லியடி பொலிஸ் பிரிவினுள் பதுங்கி இருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அங்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர் யாழ்ப்பாணதில் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 நபர்களிடம் வெளிநாடு அனுப்பி வைப்பதாக கூறி சுமார் ஒரு கோடி ரூபாய் வரையில் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார் என தெரியவந்துள்ளது.

தொடர்ந்தும் சந்தேக நபரை பொலிஸ் காவலில் வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-33)




# கச்சாய் பகுதியில்
## இளைஞன் மீது கத்திக்குத்து

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இளைஞன் ஒருவர் மீது குழுவொன்று கத்திக் குத்து நடத்தியதில் இளைஞன் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரமருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கச்சாய் பகுதியில் குழுவாக நின்ற இளைஞர் .குழுவொன்றே மேற்படி இளைஞன் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக தெரியவருகிறது.

இதில் கச்சாய் பகுதியைச் சேர்ந்த 33வயதான இளைஞனே தலையில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 900 | 300 | 700 | 800 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1300 | 1200 | 1000 |
| தக்காளி | 550 | 600 | 500 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 150 |
| கோவா | 500 | 650 | 550 | 800 |
| கரட் | 1200 | 1200 | 1200 | 1600 |
| பூசணி | 120 | 120 | 150 | 200 |
| புடோல் | 350 | 250 | 250 | 300 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 420 | 450 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 800 | 800 | 1200 |
| வெண்டக்காய் | 350 | 350 | 240 | 500 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 600 | 700 | 800 | 700 |
| லீக்ஸ் | 450 | 450 | 450 | 600 |
| பீற்றூட் | 800 | 800 | 400 | 800 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | 3000 |
| போஞ்சி | 600 | 600 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 800 | 600 | 600 | 700 |
| கீரை - 1 பிடி | 160 | 200 | 180 | 200 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 850 | 200 | 550 | 500 |
| வெங்காயப்பூ | 650 | 800 | -- | 1000 |
| முள்ளங்கி | 180 | 200 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 150 | 200 |

## தேவாரக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு பழைய வீதி வீரபத்திரர் கோயிலில் தைப்பொங்கல் நன்னாளை முன்னிட்டு இன்று திங்கட் கிழமை மாலை 5 மணியளவில் சைவப்புலவர் இராசையா ஶ்ரீதரனின் தேவாரக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

சீரடிபாபா முன்னிலையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.பிரணதார்த்திகரக் குருக்கள் தலைமை வகிப்பார். (நி)

# இராசிபலன்

15.01.2024
தை 01, திங்கட்கிழமை
சதுர்த்தி முற்பகல் 10.07 மணிவரை
சதயம் பிற்பகல் 1.11 மணிவரை

சுபநேரம் -12.34-2.04 மணிவரை
இராகு காலம்-08.04-09.34 மணிவரை
சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்.

தைப்பொங்கல் தினம்.

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




பிள்ளைகள் நன்மையில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களால் முன்னேற்றம் காணுவீர்கள், புதிய தொழில் தொடர்பில் எடுத்த முயற்சி கைகூடும்.




சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழிலில் அதிகாரிகள் ஆதரவு பெருகும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திரு ப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள்,இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.




புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும், ஆழ்ந்த சிந்தனையுண்டு.




வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பகையொன்று நட்பாகலாம், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




உறவினர் சிலரின் அன்புக்கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

கடந்து போன நேரம் ஒருபோதும் திரும்புவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தை பிறந்தால் வழி பிறக்கும்"

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்லபரம் பொருளாகிய சிவபெருமானின் அருட் திருவருட் கருணையால் இப்பூவுலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.




அந்தப் பார்வதி பரமேஸ்வரன் ஆன்மாக்களின் மீது கொண்ட கருணையின் நிமித்தம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் முதலான ஐந்தொழில்களையும் செய்து கொண்டிருக்கின்றார்.

அவன் ஆடுகின்றான். நாங்கள் ஆடுகின்றோம். அவனன்றி ஓரணுவும் அசையாது. அவனருளாலே தான் மனிதர்களாகிய நாம் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை நாம் சிந்தித்து வந்தித்துச் சேவித்து வணங்கி வாழ்த்த வேண்டியது தலையாய கடனாகும்.

கிரகங்களின் சுழற்சியால் உலகம் உருண்டோடி இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் வருடத்தில் வரும் மாதங்களில் தைமாதம் மகத்தானது. அந்தத் தைமாதம் பிறந்துவிட்டால் அநேக நன்மைகளும் அடுக்கடுக்காக வரத் தொடங்கிவிடும். இது இயற்கை யின் நியதியாகும்.

இயற்கையாகவே துன்பங்களின் மத்தியில் துவண்டு கிடக்கும் மானிட வர்க்கம் தைமாதம் எப்போது வரும் என்று காத்திருப்பது வழக்கம். இந்த 2024 புத்தாண்டின் பொங்கல் பண் இன்று கொண்டாடப்பட விருக்கிறது.நல்ல நோக்கத்தையும் இலட்சியத்தையும் அடிப்படையாக வைத்தே நமது சைவச்சான்றோர்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்லி வைத்தார்கள் போலும்.

இறைவனுடைய பேராற்றலாலும் பரங்கருணைத் தடங்கலாக விளங்கும் ஜீவ காருசண்யத்தாலும் எல்லோருக்கும் நல்லதே நடக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதை விட வேறு என்ன செய்ய முடியும்? வரப்போகும் தை மாதத்திலேயே தைப்பொங்கல், தை அமாவாசை, தைப்பூசம், பட்டிப் பொங்கல் என்ற இன்னோரன்ன பலவும் கொண்டாடப்பெறும்.

இந்தத் தை ஒரு நல்ல மாதமாகும். புதுக் கணக்குத் தொடங்குதல், காது குத்துதல், நெல் வெட்டுதல், ஏடு துவக்குதல், காணி அளத்தல், காணி வாங்குதல் என்று பல நிகழ்வுகள் ஆரம்பமாகி வித்திடப்படும்.

முக்கியமாகப் புதுமனை புகுதல், மயிர் வழித்தல், சோறு ஊட்டுதல் மக்களின் பாரம்பரிய வழக்கமாகும். ஆலயங்கள் கூட பாலஸ்தாபனமாகி கட்டட வேலைகள் திருத்த வேலைகள் நடைபெற்று குடமுழுக்கு எனப்படும் மகா கும்பாபிஷேகமும் இந்தத் தையிலேயே நிகழ்கின்றன.

தமிழ் மக்களின் பாரம்பரிய சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகளை மன நிறைவோடு செய்து தமக்கும் தாம் வாழ்கின்ற நாட்டுக்கும் நன்மைகளைத் தோற்றுவிக்கும் இந்தத் தை மாதத்தை முக மலர்ச்சியோடு வரவேற்று ஆவண செய்ய வேண்டியது நமது தலையாய கடனாகும்.ஆதலால் வரஇருக்கும் தை மகளை" தைமகளே வருக!

எங்கள் தமிழ் மகளே வருக!! என்று பூரணகும்பம் வைத்து வழி பாடியற்றி மகிழ்வோம்.

வாருங்கள்! வாருங்கள்!! வரவேற்று மகிழுங்கள்!!!"

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

### தவமாக வேண்டும்

இன மத மொழி பேதமில்லா
நாடாக
இலங்கை மிளிர வேண்டும்
எவரும் ஆளலாம் என்பதே
ஜனநாயகம்
இதற்கு வழி பிறக்க வேண்டும்

மனமதில் மாற்றம்
நிகழாவிட்டால்
மக்களின் வாழ்வு சமிக்காது
மாதவபூமி பண்ணிய
புண்ணியம்
மண்ணிலே பூத்திட
வேண்டும்

தினந்தினம் போதையால் நாடு
புண்ணாகுது
தீர்ப்பதில் அக்கறை எவருக்கு
மில்லை
தீராது என்பதால் தினமும்
உள்வருகுது எனவே
தைமகளே உனக்குப்பொறுப்பு
அதிகம்

வனமது மரமென வரிகளோ
வாட்டுது
வயிறு பசியால் அழுகிறது-
இன்று
வரமாகும் தைப்பொங்கல்
தவமாக வேண்டும்
வறுமையினி அகல வேண்டும்
மகளே!



கே.எஸ்.சிவஞானராஜா

உ
ஓம் நமசிவாய
ஆத்ம நாதா

# தைப்பொங்கல் இன்று நாம் சூரியபகவானுக்கு இல்லங்களிலும் ஆலயங்களிலும் மடாலயங்களிலும் பொங்குவோம்

### திசை எட்டும் திகழும் தெய்வம்

**முக்கணன் தானே முச்சுடர் ஆனவன்**
**அக்கணன் தானே அகிலமும் உண்டவன்**
**திக்கண னாகித் திகை யெட்டும் கண்டவன்**
**எக்கணன் தானுக்கும் எந்தை பிரானே**

சூரியன், சந்திரன், நெற்றிக் கண்களாகக் கொண்ட சிவனே முழுச்சுடராகவும் விளங்கியது.

இக் கண்ணுடைய அவனே எல்லா உலகங்களையும் உயிர்களையும் தன்னுள் கொண்டிருக்கிறான்.திசை எட்டும் பரவி நிற்கும் இச் சிவப் பரம் பொருளே திசையெல்லாம் நோக்கும் அருட்பாவை உடையவனாக இருக்கிறான்.

சூரியன் எல்லாக் கிரகங்களினும் நடு நாயகனாகவும் இருந்து உலகு எங்கும் இருளையும் மிக முக்கியமாக எமது உள்ளத்தின் இருளையும் அகற்றி அக ஒளியையும் புற உலக ஒளியையும் தரும் கருணையே வடிவமான சூரிய பகவானையும் இறைவனையும் மன அமைதியுடன் பொங்கி சூரிய பகவானுக்கும். இறைவனுக்கும் நிவேதனம் செய்து வணங்குவோம்.

உழவர் திருநாளாம் தைத்திருநாளில் சூரிய பகவானுக்கு வணக்கம் செலுத்தும் முகமாக நாம் எல்லோரும் நம் இல்லங்களிலும் ஆலயங்களிலும் மடாலயங்களிலும் தொழில் செய்யும் ஸ்தாபனாங்களிலும் கல்விச்சாலைகளிலும் நூல் நிலையங்களிலும் பொங்கல் செய்து படைப்பது, நாங்கள் தமிழர் வாழ்வின் வாழையடி வாழையடியாக நடைமுறையில் உள்ள பண்பாடு ஆகும்.

**நாங்கள் மற்ற மனிதர்கள் மீதும் சகல ஜீவராசிகள் மீதும், இத் திருநாட்களினும் கருணையுள்ளவர்களாக எங்களை மாற்றி பக்குவப்படுத்தி கைகொள்ள வேண்டும்.**

**அந்தவகையில் கடந்த மாதத்தில் இருந்து இன்று வரையும் ஏற்பட்ட வெள்ள, இயற்கைச் சீற்ற அனர்த்தத்தினால் பெருவாரியான மக்கள் சொல்லொனா துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்."ஓம் நமசிவாய"**

**அவர்களுக்கு நாங்கள் எல்லோரும் எங்களுக்கு ஏற்பட்ட துன்பமாக நினைத்து உதவி செய்ய இத் தைத்திருநாளில் முன்வருமாறும்,** எமது குல தெய்வம் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரத்தான். ஆலய புனருத்தானம், கும்பாபிஷேகம் நடக்கவும் ஆண்டி ஐயனாரையும் திண்ணபுரச்சிவனையும் பிரார்த்திப்பதுடன், உதவி செய்ய இத் திருநாளில் அன்பாகவும் பணிவாகவும் கேட்டுக்கொள்கின்றோம். " ஓம் நமசிவாய"

### துன்பம் அகலத் தூபதீபம் காட்டுக

**அன்புடனே நின்று அமுதமும் ஏற்றியே**
**பொன்செய் விளக்கும் புதை தீபந் திசை தொறுந்**
**துன்பம் அகற்றித் தொழுவோர் நினைவுங்கால**
**இன்புடனே வந்து எய்திடும் முத்தியே...**

திருமந்திரம் -1000
**யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை**
திருமந்திரம்-252(1 ஆவது வரி)

ஓர் பச்சிலை, பூ இட்டு, அன்பு மீதூற தைப்பொங்கலாக அமுதம் பொங்கல் பச்சை அரிசி அன்னம். சூரிய பகவானுக்கு இல்லங்களிலும், ஆலயங்களிலும் நிவேதனம் செய்து, பொன் ஒளி-வீசும் விளக்கு ஏற்றி, எல்லாத் திசைகளும் தூபம், தீபம் காட்டி, வணங்குபவர் இம்மைப்பேறும், மறுமை பேறான வீடுபேறும் அடைவர். "ஓம் நமசிவாய"

திருமந்திரம் 252 இல் மிகுதி மூன்று வரியும் பட்டிப்பொங்கலில் மலரும் "ஓம் நமசிவாய"

தை பிறந்தால் வழி பிறக்கும்-கள்ளத்துக்கும் மாமிசத்துக்கும் புழுக்களுக்கும் இடமான வீடு களவுத் தனமுள்ள தோலாலான பையாகிய இவ்வுடலை சுமக்காதபடி, "சிவசிவசூரிய நாராயண மூர்த்தியே" ஞானக் கண்ணால் நோக்கும் அறிவு ஊறி அழியாது நிற்பதாய் உள்ள அந்தப் பரம்பொருளை அடியேன் காண அருள்வாய் "ஓம் நமசிவாய".



**பொங்கல் வாழ்த்துக்கள்**
**க.கு.க சிவபாலன்**
**காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலய பாதுகாவலர்**
**அகில இலங்கைத்திருமன்றம் (பொருளாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பட்டிப் பொங்கலும் கோபவனியும்

(யாழ்ப்பாணம்)

பட்டிப் பொங்கல் விழாவும் கோமாதா உற்சவமும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் சத்திரத்துச் சத்தி ஞான வைரவர் ஆலயத்தில் தலைவர் திருமுறைப் பாராயணச் செல்வர் ப.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கே.கே.எஸ்வீதி வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பம் ஆகும் கோபவனி, மின்சார நிலைய வீதி, பெரியகரை, யாழ்.பேருந்து நிலைய மேற்கு வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக ஆலயத்தை வந்தடையும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், யாழ்.அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(6)



# குருந்தூர்மலையில் மறைமுகமாக இடம்பெற்ற கலந்துரையாடல்



(நெளுக்குளம்)

குருந்தூர்மலை ஆலய நிர்வாகத்தினருக்கும் பௌத்தமத குருமார்களுக்கும் இன மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை குருந்தூர்மலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வடகிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பாக ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்ட சியம்பலகஸ்கல விமலசார தேரர் தலைமையில், சிவசேனை அமைப்பின் வன்னி பிராந்திய இணைத்தலைவர் தமிழ்த்திரு மாதவன் உள்ளிட்ட குழுவினர் மற்றும் குந்தூர்மலை ஆலய நிர்வாகத்தினர், பௌத்த மத குருமார்களுக்கிடையில் இனமத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் விஷேட இரகசிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் குருந்தூர்மலை தமிழ் மக்களின் பூர்வீகம். இனி குருந்தூர் மலையில் எவ்விதமான பௌத்த கட்டுமானங்களும் அமைக்கப்படக் கூடாது. அவ்வாறு அமைப்பது தமிழ் -சிங்கள மக்களுக்கிடையே இன முரண்பாட்டை தோற்றுவிக்கும். இச்செயற்பாடு நில அபகரிப்பாகத்தான் இருக்கும் என குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான பல பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது. (நி-6-299)

# சிறுமி மாயம்; பொலிஸார் விசாரணை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் நோயாளர் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த 16 வயது நிரம்பாத சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை இரவு விடுதியில் இருந்து சில மணிநேரம் காணாமல்போன விவகாரம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தாயார் ஒருவர் தனது 16வயது நிரம்பாத சிறுமியையும் ஒரு வயது குழந்தையும் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் வெவ்வேறு நோயாளர் விடுதிகளில் அனுமதித்திருந்தார்.

இந்நிலையில் குறித் சிறுமி விடுதியில் இருந்து காணாமல் போயிருந்த நிலையில் அவ்விடயத்தை சிறுமியின் தாயார் மருத்துவமனை நிர்வாகத்திடம் தெரிவித்திருந்தார்.

சமநேரத்தில் மருத்துவமனையில் கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியரான இளைஞன் ஒருவரும் காணாமல் போயிருந்தமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

இருப்பினும் சில மணி நேரத்தில் சிறுமியும் அதனையடுத்து பாதுகாப்பு ஊழியரும் வெளிப்பட்டிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் சாவகச்சேரிப் பொலிஸார் சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

மருத்துவப் பரிசோதனை அறிக்கையின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-30)

# பிரமண்டு வித்தியாலயத்தில் வகுப்பறை உடைத்து திருட்டு

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா தாண்டிக்குளம், பிரமண்டு வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை உடைத்து அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலையில் திறன் வகுப்பறையின் பூட்டு உடைக்கப்பட்டு பல இலட்சம் பெறுமதியான தொலைக்காட்சி களவாடப்பட்டமை தொடர்பில் நேற்று முன்தினம் கண்டறியப்பட்ட நிலையில், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை மேற்கொண்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாடசாலைக்கு நேற்றுக் காலை விரைந்த வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், பாடசாலைக்கு அருகேயுள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி காணொளிகளையும் பரிசோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது, கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 3.29 மணியளவில் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் தொலைக்காட்சியினை தூக்கிச் செல்வது காணொளியில் பதிவாகியுள்ளது. குறித்த காட்சியின் உதவியுடன் அச்சிறுவனை கண்டுபிடிப்பதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்துள்ளதுடன் பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை பாதுகாவலர்கள் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (நி-6-250)

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்**

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண கலாசார மண்டபத்தில் நடைபெற்ற திருமண வைபவமும் அதன் பின்பு நடைபெற்ற விருந்து உபசாரமும் முக்கியமாக பரிமாறப்பட்ட உணவு மிகவும் சுவையாகவும் ஏனைய வசதிகள் உலகத் தராதரத்துக்கு நிகராக இருந்ததைக் கண்டு மிக மகிழ்ச்சி அடைந்தோம். -டாக்டர் விஜயவர்மன் டாக்டர் அபர்ணா.

**திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவுத்திருமணங்கள், முஸ்லீம் நிக்கா (திருமணங்கள்) அரங்கேற்றம், இலங்கை -இந்திய கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள், வியாபார ஸ்தாபனங்களின் கூட்டங்கள் (அரச, தனியார் நிறுவனங்களின் நிகழ்வுகள்), ஏனைய வைபவங்களையும் நடத்துவதற்கு நாடுங்கள்.**

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்**
**கலாசார திருமண மண்டபம்.**
**இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம்: 021 222 1355**

(15555)

உ
நாக கன்னி அம்பாள் துணை

**சித்தன்கேணி அருள்மிகு**
**ஸ்ரீ நாக கன்னி அம்பாள் ஆலயம்**

**தைப்பொங்கல் தீ மிதிப்பு**





**தைப்பொங்கல் இன்று திங்கட்கிழமை**
**பகல் 12 மணி**

கிரியைகளை நிகழ்த்துபவர்
அருள்நெறிச்செல்வன் தேசமான்ய சாமஸ்ரீ
**சித்தஞானகுரு இந்திரன் ஐயா**
உதவிக்குரு தேவி உபாசகர் **சுதா ஐயா**
நித்தியபூசை **மணி ஐயா**

சைவச்சொற்பொழிவு
இளம் சைவப்புலவர் சைவ சின்மயர் க.நித்தியபாபுதரன்
அருட்சொல்வாரி சைவசித்தாந்த கலாநிதி வருணனைக் கலாநிதி
பிரசங்க பூசணம் சைவப்புலவர் **செ.கந்தசத்தியதாசன்** J.P,M.A

விசேட மேளக்கச்சேரி
ஈழநல்லூர் பாலமுருகன் குழுவினர்,
வட்டூர் இராமநாதன் புதல்வர்கள் குழுவினர்,
சித்தன்கேணி கண்ணன் குழுவினர்.

*சித்தஞானகுரு இந்திரன் ஐயாவும்*
*உபயகாரர்களும் தொண்டர்களும்.*

(ச-8134)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மனித உரிமை விவகாரங்களில் இரட்டை வேடம்போடும் உலக தலைவர்கள்

## சர்வதேச மனித உரிமை அறிக்கை



(ஜெனீவா)

உலக நாடுகளின் தலைவர்கள் சட்டங்களை நடைமுறைப்படுத்த தவறுவதால் சர்வதேச அளவில் மனித உரிமைகள் வீழ்ச்சியடைந்துள்ளன என சர்வதேச மனிதஉரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சட்டங்களை நிறைவேற்றவேண்டிய தங்கள் கடப்பாட்டினை உலக தலைவர்கள் புறக்கணிப்பதால் உலகம் முழுவதும் மனித உரிமை நிலவரம் மோசமடைந்துள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தனது வருடாந்த அறிக்கையில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சர்வதேச அளவில் அதிகரிக்கும் மனித உரிமை நெருக்கடிகள் குறித்து கடுமையாக எச்சரித்துள்ளது.

யுத்தகால அநீதிகள் பலமடங்காக அதிகரிக்கின்றன மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான ஒடுக்குமுறை சர்வதேச மனித உரிமை கொள்கைகள் சட்டங்கள் தாக்குதலிற்குள்ளாகின்றன அரசாங்கங்கள் அவற்றை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன.

மனித உரிமை மீறல்கள் குறித்து தெரிவுசெய்து சீற்றத்தை வெளிப்படுத்துதல் பரிவர்த்தனைஇராஜதந்திரம் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சட்டங்களை அங்கீகரிப்பதில் இரட்டை நிலைப்பாடுகள் போன்றவற்றினால் ஆயிரக் கணக்கான உயிர்களிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் .ஹமாஸ் மோதலில் வெளிப்படையாக தெரியும் இரட்டை நிலைப்பாடுகளிற்கு அப்பால் ஏனைய பல மனித உரிமை விவகாரங்களிலும் இரட்டை நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

மனித குலத்திற்கு எதிரான சீன அரசாங்கத்தின் குற்றங்கள் தொடர்பில் மௌனம் கடைப்பிடிக்கப்படுகின்றது. உக்ரைனில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து பொறுப்புக்கூறலும்நீதியும் அவசியம் என உரத்த குரலில் வேண்டுகோள்கள் விடுக்கப்படும்.அதேவேளை ஆப்கானில் அமெரிக்காவின் மனிதஉரிமை துஸ்பிரயோகங்கள் குறித்து மௌனம் காக்கப்படுகின்றது எனவும் சர்வதேச கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (நி-6)

## காதலரை கரம்பிடித்தார் ஜெசிந்தா ஆர்டெர்ன்



(வெலிங்டன்)

நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தனது நீண்டகால காதலரான கிளார்க் கெய்ஃபோர்டை நேற்று முன்தினம் சனிக்கிழமை திருமணம் செய்து கொண்டுள்ளார்.

43 வயதான ஜெசிந்தா ஆர்டெர்னும் 47 வயதான கிளார்க் கெய்ஃபோர்டும் 2019 இல் நிச்சயதார்த்தம் செய்து கொண்டனர். 2022 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொள்ளவிருந்தனர். ஆனால் கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக திருமணம் இரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நியூசிலாந்தின் தலைநகரான வெலிங்டனில் 325 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அழகிய ஹாக்ஸ் பே பகுதியில் திருமணம் நடைபெற்றுள்ளது.

ஜெசிந்தா ஆர்டெர்ன் 2017 ஆம் ஆண்டில் 37 வயதில் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது உயரிய பதவியை பெற்ற உலகின் இளைய பெண் தலைவர் என்று அறியப்பட்டார்.

பதவியேற்று ஒரு வருடம் கழித்து, அவர் குழந்தை பெற்றுக் கொண்ட போது, பதவியில் இருக்கும் போது குழந்தை பெற்றுக் கொண்ட இரண்டாவது பெண் தலைவர் என்ற சிறப்பையும். அவர் பெற்றார். மேலும், அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத்தில் தனது குழந்தையுடன் அவர் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இஸ்ரேல்-ஹமாஸ் போர் 100 நாட்களைக் கடந்தது



(ஜெருசலேம்)

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நேற்று ஞாயிற்றுக்கிழமையுடன் நூறு நாட்களை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி இரு நாட்டுக்கும் இடையிலான போர் ஆரம்பமானது.

இந்த போரில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்ததுடன் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை காசா மீது இஸ்ரேல் படைகள் நடத்திய வான்வெளி தாக்குதலில் இதுவரை 10,000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் காசாவில் வசித்து வரும் 11 இலட்சம் குழந்தைகளில் 10,000 இற்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழந்துள்ளதால் மொத்த குழந்தை மக்கள் தொகையில் ஒரு சதவீதம் பேர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தாய்வ
## சீனாவி
## கருதப்ப

(பீஜிங்)

சீனாவினால் பிரச்சி
இறைமை ஆதரவு ஜன
தாய்வான் ஜனாதிபதி

2020 முதல் தாய்வானின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் லாய்சிங் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சீனாவின் கொள் மைய தேசிய முன் தொட

## ஒரே இரவி
## அடுத்தடுத்து 4

(கீவ்)

ரஷ்யா நேற்று முன்தினம் ஒரே நாள் இரவில் உக்ரைன் மீது அடுத்தடுத்து 40 இற்கும் மேற்பட்ட ஏவுகணை, ட்ரோன் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளது.

உக்ரைன் மீது கடந்த 2022 பெப்ரவரி 24 ஆம் திகதி முதல் ரஷ்யா போர் தொடுத்துள்ளது. சுமார் 2 ஆண்டுகளை நெருங்கியுள்ள நிலையில் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நேற்று முன் தினம் இரவு, திடீரென 40 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதல்களில் ரஷ்யா ஈடுபட்டுள்ளதாக உக்ரைனில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து உக்ரைனிய விமானப்படை நேற்று வெளியிட்டுள்ள தகவலில், "உக்ரைனின் கீவ் நகரம் அதிக தாக்கு



தலு ரஷ் இ க்ை ஒரு வ மே தல் அ அழு

## கொலம்பியா
## 33 பேர் உயிரி

(கொலம்பியா)

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் ஏற்பட்ட மண் சரிவில் 33 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மைத்துறை அதிகாரி ள்ளனர். கிழமை இடம்பெ செய்திக ள்ளது. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானில் ஜனாதிபதித் தேர்தல்

## வினால் பிரச்சினைக்குரியவராக

## ப்படும் லாய்சிங் மீண்டும் வெற்றி!

**பிரச்சினைக்குரியவராகக கருதப்படுபவரும் தாய்வானின் வு ஜனநாயக முற்போக்கு கட்சியின் வேட்பாளருமான லாய்சிங் திபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.**




கொள்கைக்கு எதிராக இறைமையுள்ள தாய்வானையும் தேசிய அடையாளத்தையும் முன்நிறுத்தும் அரசாங்கம் தொடர்ந்து தாய்வானை ஆட்சி புரியும் நிலையை உருவாக்கியுள்ளது. லாய்சிங்கிற்கு 40 வீத வாக்குகள் கிடைத்துள்ளன.

சீனாவுடனான எதிர்கால த்தை தீர்மானிக்கக் கூடிய தாய்வானின் ஜனாதிபதித் தேர்தலில் 19.5 மில்லியன் மக்கள் வாக்களித்துள்ளனர்.

ஜனாதிபதி வில்லியம் லாய் பிரச்சினைகளை உருவாக்குகின்றார் என தெரிவித்துள்ள சீனா அவருக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டாம் என மக்களை கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வில் உக்ரைன் மீது

## து 40 ஏவுகணை தாக்குதல்



தலுக்கு உள்ளாகியுள்ளது. ரஷ்ய ஏவுகணை தாக்குதலை இடை மறித்து அழிக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு இரவில் இரு நது இது வரை மொத்தம் 40 இற்கும் மேற்பட்ட ஏவுகணை தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 8 ஏவுகணைகள் அழிக்கப்பட்டுள்ளன.

கப்பல், 'பாலிஸ்டிக் ஏவுகணை, விமான எதிர்ப்பு ஏவுகணைகள், ட்ரோன்கள் உள்ளிட்ட பல்வேறு வகை யான ஆயுதங்களைக் கொண்டு ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. உக்ரைனின் நவீன போர் முறைகள் மூலம் 20 இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் அதன் இலக்கை அடைய தவறின" என தெரிவித்துள்ளது. (நி)

## இஸ்ரேல் வெற்றி பெறுவதை எவராலும் தடுக்க முடியாது

**பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பெருமிதம்**



(ஜெருசலேம்)

காசாவில் ஹமாஸ் தரப்பினருக்கு எதிரான யுத்தத்தில் இஸ்ரேல் வெற்றி பெறுவதை எவராலும் தடுக்க முடியாதென இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தரப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான யுத்தம் ஆரம்பமாகி இன்றுடன் 100 நாட்கள் கடந்துள்ள நிலையில், தொலைக்காட்சி செவ்வி ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் இடம்பெற்று வரும் தாக்குதலில், ஹமாஸ் படையினரால் கைப்பற்றப்பட்ட பல இடங்கள் மீண்டும் இஸ்ரேலினால் கைப் பற் றப் பட் டு ள் ளன.

இந் த நிலையில், வடக்கு காசாவில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் தங்களது வீடுகளுக்கு மீண்டும் திரும்ப முடியாத சூழ்நிலை நிலவுவதாக குறிப்பிடப்படுகிறது. (நி)

## பியாவில் மண்சரிவு

## பிரிழப்பு: பலர் மாயம்

திகாரிகள் தெரிவித்து ளனர். கடந்த வெள்ளிக் ழமை இந்த மண்சரிவு டம்பெற்றுள்ளதாகவும் சய்திகள் வெளியாகியுள்ளது.

இந்த அனர்த்தம் குறித்து கொலம்பியாவின் தேசிய பேரிடர் மேலாண்மைத் துறை அதிகாரிகள் மேலும் தெரிவித்ததாவது.

குயிபோ, மெடெலின் நகரங்களுக்கு இடையிலான மலைப் பகுதியில்



கடந்த வெள்ளிக்கிழமை இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மண்சரிவில் சிக்கி புதையுண்டு 33 பேர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர், இந்தச் சம்பவத்தில் மேலும் சிலர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மீட்புப் பணிகள் தொடர்ந்தும் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இருப்பினும், மழையின் காரணமாக மீட்புப் பணிகளில் இடர்பாடு ஏற்பட்டுள்ளதாகப் பாதுகாப் புத் துறை அமைச்சகம் வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆரம்பத்திற்கான நம்பிக்கையை பொங்கல் திருநாள் குறிக்கிறது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

**வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப் புவதில் விவசாயத்தின் மீது பாரிய நம் பிக்கை கொண்டுள்ளோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.**



தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உழவர் திருநாளான தைத்திருநாள், மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப் படுத்தும் வகையில், உலகெங்கிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தால் கொண் டாடப்படும் ஒரு செழிப்பான அறுவடைத் திருவிழாவாகும்.

வளமான அறுவடையையும் புதிய ஆரம்பத்திற்கான நம்பிக்கையையும் தைப்பொங்கல் திருநாள் குறிக்கிறது.

தமிழ் நாட்காட்டியின்படி தை மாதத் தில் சூரியன் வடக்குக்கு நகரும்போது, நிகழும் மங்களகரமான அறுவடைக் காலத்தின் ஆரம்பமாக தைத்திருநாள் அமைந்துள்ளது.

அறுவடையின் செழுமைக்கு வித் திட்ட இயற்கை, கால்நடைகள் உள்ளிட்ட அனைத்துக்கும் மனதார நன்றி கூறுவதே பண்டிகையின் நோக்கமா கும்.

இரண்டு வருடங்களாக விவசாயி களின் அர்பணிப்புக்களுக்கு மத்தியில் நாடு வெற்றிப் பாதைக்குள் பிரவேசிக்கும் வேளையில் தைப்பொங்கல் பண்டிகை இம்முறை கொண்டாடப்படுகிறது.

வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெ ழுப்புவதில் விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம்.

விவசாயத்தை நவீனமயப்படுத் துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயற்படுத்த ஆரம்பித்துள்ளது.

அந்த அனைத்து பணிகளும் வெற்றி யளிக்க இம்முறை தைப்பொங்கல் தினத்தில் இயற்கையின் ஆசீர்வாதம் கிட்ட வேண்டுமென பிரார்த்திக்கி றோம்.

அதேபோல் தைப்பொங்கல் நமக்கு சகவாழ்வையும் மதிப்பையும் போதிக் கிறது.

அதற்கமைய நாட்டின் எதிர்காலத்துக் கான புதிய எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்கு ஒருதாய் மக்களாக முன் னேற்றம் அடைய வேண்டும் என அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்ளும் அதேநேரம், தமிழர்கள் அனைவ ருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறை ந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்." என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (நி-6)

# வற் வரி அதிகரிப்பு சுற்றுலாப் பயணிகள் சிரமம்

(கொழும்பு)

வற் வரி அமுல்படுத்தப்பட்டமையினால் சிகிரியாவை பார்வையிட வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாக சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சிகிரிய சுற்றுலா வழிகாட்டிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் வெளிநாட்டு சுற் றுலாப் பயணிகள் சிகிரியாவை பார்வையிடு வதற்கு, அனுமதிச் சீட்டுக்களை டொலரில் கொள்வனவு செய்யும் நிலை காணப்பட் டது.

தற்போது, வற் வரி அமுல்படுத்தப பட்டதன் பின்னர் அனுமதி சீட்டுக்கள் ரூபாய் நாணய அலகில் மாத்திரம் வழங் கப்படுவதாக அந்த சங்கத்தின் தலைவர் சமன் மோரேமட தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சிகிரியாவை பார்வை யிடுவதற்காக வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவருக்கு 30 டொலர் அறவிடப்பட்டு வந்த நிலையில், தற்போது அந்தத் தொகை 36 டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிகிரியாவிற்கு வருகை தரும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவருக்கு இல ங்கை நாணயத்தில் 11,772 ரூபாய் அற விடப்படுகிறது.

இதன்காரணமாக பல வெளிநாட்டு சுற்று லாப் பயணிகள் சிகிரியாவிற்கு விஜயம் செய்யாமல் சிகிரியாவை சுற்றி உள்ள இடங்களை பார்வையிட செல்வதாகவும் சிகிரிய சுற்றுலா வழிகாட்டிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல் 06



தென்கச்சி கோசுவாமிநாதன்

## மனமும் உடலும்

மனசு நல்லா இருந்தா உடம்பு நல்லா இருக்கும். உள்ளம் ஆரோக் கியமா இருக்கிறவங்களுக்கு உடம்பும் ஆரோக்கியமா இருக்கும். உள்ளத்துலே தெம்பும் மகிழ்ச்சியும் இருந்தா நோயும் சோர்வும் அணுகிறதில்ல. நாம மனசு கசந்து போயி இருந்தோம்னா நமக்கு நோய் வருவதற்கான சந்தர்ப்பமும் அதிகம். இரண்டு பேருக்கு ஒரே விதமான நோய். அதிலே ஒருத்தர் மனத்தெம்பு உள்ளவர், இன்னொருத்தர் மனத்தெம்பு இல்லாதவர். இந்த இரண்டு பேருக்கும் ஒரேவிதமான மருந்தைக் கொடுக்கிறாங்க. மனத்தெம்பு உள்ளவருக்கு சுலபமா குணமாயிடுது. இன்னொருத்தருக்கு கால தாமதம் ஆகுது.

மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் பல விதமான சோதனையெல்லாம் பண்ணிப் பார்த்துட்டு இதைச்சொல்றாங்க. "வாழ்க்கையோட உண்மைகளை லேசா எடுத்துக்கிட்டு சிரிச்ச முகத்தோட கவலை இல்லாமே வாழுறவங்க கிட்ட நோய்கள் நெருங்கிறதில்ல." மேரி லாண்டில் இருக்கிற மனஇயல் ஆராய்ச்சி நிபுணர் மைக்கேல் ரஃப் இதைச் சொல்கிறார். வழக்கம் போல இதிலேயும் எலியை வைச்சு சில ஆராய்ச்சியெல்லாம் பண்ணினாங்க. ரெண்டு குரூப் எலிகள். ஒரு குரூப் அமைதியா இருக்கிறதைப் போல பண்ணினாங்க. இன்னொரு குரூப்புக்கு சில அவஸ்தைகளை உண்டு பண்ணினாங்க.

அமைதியா இருந்த எலிக்கு நோய் எதிர்ப்புத்திறன் அதிகமா இருந்தது. அமைதியில்லாம இருந்த எலியெல்லாம் தொற்று நோயி னாலே சீக்கிரமா பாதிக்கப்பட்டது. பல இறந்தும் போயிறறு. நம்ம உடம்புக்கு ஏதாவது கஷ்டம் வாறப்போவெல்லாம் அட்ரினலின் சுரப்பிகளுக்கு மூளை எச்சரிக்கை கொடுக்குது. அதனாலே இது விறுவிறுப்பா வேலை செய்யதூண்டப்படுது. அதனாலே மூளை தெளிவாவும் மனசில கலக்கம் இல்லாமலும் இருக்கக் கூடிய நிலை மையிலே இந்த சுரப்பிகள் சரியா, பக்குவமா இயங்குது. அப்படி இல்லாத நிலைமையிலே எதிர்ப்புத்திறன் குறைந்து போகுது.

இது சாதாரண நோய்க்கு மட்டும் இல்லாமே தொற்று நோய்க்கும் பொருந்தும். அப்படின்னு இப்போ கண்டு பிடிச்சிருக்காங்க. ஒரு பத்து வருஷத்துக்கு முன்னாடி இப்படி சொல்லியிருந்தா எல்லாரும் சிரிச்சிருப்பாங்க. தொற்று நோய் பரவுறதுக்கு உணவு, நீர், காற்று அப்புறம் இதைச் சார்ந்து வர்ற கிருமிகள் தரக்கூடிய பாதிப்புகள் இதெல்லாம்தான் அடிப்படைக் காரணம்ன்னு ஏற்கனவே நமக்கு எல்லாரும் சொல்லியிருக்காங்க.

அதே மாதிரி முதுமை பலவீனம் - உடல்சோர்வு, சத்துணவு, இல்லாத நிலைமை இதெல்லாம்கூட தொற்று நோய் பரவ காரணம்ன்னு நமக்குத் தெரியும். மன அமைதி - உள்ள நிறைவு, மன மகிழ்ச்சி இதெல்லாம் நம்மை இந்த நோய்களின் பாதிப்பிலிரு ந்து காப்பாற்றும் என்றோ மனசலிப்பு-துயரம்-மனக்கசப்பு-மன அமைதிக் குலைவு- இதெல்லாம் இந்த நோய்களின் பாதிப்பைத் தூண்டும் என்றோ இதுவரைக்கும் நமக்கு யாரும் சொன்னதில்லை. இப்ப சொல்றாங்க.

இங்கிலாந்திலே சாலிஸ்பரில் அப்படிங்கிற ஒரு ஊரிலே ஒரு ஆராய்ச்சி. ஜலதோஷம், இருமல். கபம் சம்பந்தமாக ஆராய்ச்சி பண்ற நிபுணர்கள் புதுசா ஒரு உத்தியைக் கையாண்டாங்க. 50 பேரிலே 25 பேருக்கு இந்த தொல்லையைத் தடுக்கக்கூடிய மருந்து மாத்திரைகள் மட்டும் குடுத்தாங்க. இன்னொரு 25 பேருக்கிட்டே என்ன சொன் னாங்கன்னா இந்த மருந்து குடுத்தும் உங்களுக்கு சரியா வரலேன்னா உங்க வயிற்றின் உள்ளே குழாயை செலுத்தி ஜீரண நீரை வெளியே எடுத்துச் சோதனை செய்ய வேண்டியிருக்கும். அப்படின்னு எச்சரிக் கையா சொல்லி வைத்தாங்க. அவ்வளவுதான் இவங்களுக்கு பயம் வந்திட்டுது. மாத்திரை மட்டும் சாப்பிட்டவங்க குணமாயிட்டாங்க. பயந்தவங்களுக்கு பாதிப்பு இன்னமும் அதிகமாயிட்டுது.

இதுலேயிருந்து என்ன தெரியுதுன்னா. மனக்கவலையும் பயமும் கலக்கமும் உண்டாகிறப்போ உடம்பிலே இயல்பா இருக்கக்கூடிய எதிர்ப்புத்திறன் அதிகமா பாதிக்கப்படுது. அந்த ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டிருக்கிற முடிவு இது. நம்ம மெஞ்ஞானம் என்ன சொல்லுது? பற்றில்லாமல் ஒவ்வொரு காரியத்தையும் கடமை உணர்வோட செய்யிறப்போ அதோட வெற்றி- தோல்வி நம்மை பாதிக்கிறது இல்ல. அதனாலே மனக்கவலை இல்லாமே வாழ முடியுது. சுருக்கமா சொல்லப்போனா, எதுக்கும் கவலைப்படாதீங்க. பதவி, பணம், புகழ் இதை நினைச்சி ரொம்பவும் அலட்டிக்காதீங்க. அப்படி இருந்து அனுபவிச்சுப் பாத்தாத்தான் அதோட அருமை புரியும்.

பயந்தவன் கதை ஒண்ணு உங்களுக்குத் தெரியுமா? ஒருத்தன் உடம்பு சரியில்லைன்னு டாக்டருகிட்டே காட்டுறதுக்காக கிராமத்துலே இருந்து ரவுனுக்குப் போயிட்டு திரும்பி ஊருக்கு வந்து கொண்டி ருந்தான். இருட்டிப்போச்சி வழியிலே ஒரு சுடுகாடு. அதைத் தாண்டி ஊருக்குப் போகணும். அந்த சுடுகாட்டிலே பேய், ஆவி உலாவறதாக ஒரு வதந்தி. இவனுக்கு இந்த இருட்டுலே தனியா அதை கடந்து போறதுக்கு பயம். பேசாம உட்கார்ந்திருந்தான். யாராவது ஆள் இந்த வழியா வரட்டும். அவங்களோட சேர்ந்து அந்தப் பக்கம் போயிட லாம்ன்னு நினைப்பு. அவன் நினைச்ச மாதிரியே ஒரு துணை கிடைச்சுது. ஒரு ஆள் வந்தான். ஏன் உட்கார்ந்திருக்கீங்கன்னு இவனைப் பார்த்து கேட்டான். துணைக்கு யாராவது வரட்டும்ன்னு பாத்துக் கொண்டி ருந்தேன் என்றான்.

நானும் அந்த பக்கம்தான் போறேன். சரி வாங்க போகலாம்ன்னான் அவன். ரெண்டு பேரும் பேசிக்கிட்டே அந்த சுடுகாட் டிலே நடந்து போய்க் கொண்டிருந்தாங்க. இந்த சுடுகாட்டில பேய், பிசாசுலாம் நடமாடுறதா ஊரில பேசியிருக்கிறாங்க ளேன்னான் பயந்த ஆசாமி. "அப்படியா எனக்குத் தெரியாதே!" ன்னான் துணைக்கு வந்த ஆள். "அது எப்படி உனக்குத் தெரியாம போச்சு?" என்றான் இவன். இதுக்கு அந்த ஆள் "என்னா... நான் செத்துப் போயி இருபது வருஷம் ஆச்சே!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## ஆவாரை

Botanical name - cossia auriculata
engl -tanner's cassias
family -Rubaneae
sinh-ranawara



பூக்கும் இருவித்திலை தாவரம். புதர்ப்பெருஞ்செடியாகும். அடியிலும் முடியிலும் குறுகிய 8-12 சிற்றிலைகளைக் கொண்ட பசிய கூட்டிலை. இலையடிக் காம்பின் இரு புறத்திலும் அகன்ற காது வடிவான பசிய இலையடிச் செதிகள் காணப்படும். கிளை நுனியில் ஆனால் இலைக் கோணத்தில் நுனி வளராப் பூந்துணர்கொத்தாகத் தோன்றும் மலர்கள் மஞ்சள் நிறமானவை. அதிக இதழ்கள் விரிந்து காணப்படும். இரு சூலக ஓரறைச் சூலகம் பல சூல்கள் உலர்கனி காம்புடையது. 10-15 cm நீளமுடையது.

விதைகள் மூலமும் வேர்க் கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம். யாழ்ப்பாணத்தில் கைவிடப்பட்ட தரிசி நிலங்களில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படும்.

இதன் இலை, பூ, பட்டை, விதை,பிசின்,ஆகிய அனைத்தும் மருத்துவ குணாங்கள் மிகுந்தவை.இலைகளுக்கு குளிர்ச்சியுண்டாக்கும் தன்மையிருப்பதால் புராதன மக்கள் வெயிலில் வெகு தூரம் நடப்பவர்கள் இவ்விலைகளை தலையின் மீது பரப்பி அதன் மீது தலைப்பாகையிட்டு நடக்க வெப்பம் தாக்காது

மற்றும் முற்காலத்தில் நெல் வயல்கள் செய்யும் போது ஆவாரம் செடிகளைக் கொண்டு நிலத்தை பண்படுத்தி பின்பு நெல் விதைப்பார்கள். இவ்வாறு இயற்கை மூலிகை பசளை பாவனையால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதால் அங்கு உரங்கள் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சேதன பசளைகள் மூலமே பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பூக்களை சமைத்துச் சாப்பிடுவதால் உடல் வெப்பம் தணிந்து நீரிழிவையும் கட்டுப் படுத்தும். ஆவாரம் செடியின் இலையை நீர் சேர்த்து அரைத்து சிரங்குகள் மீது போட்டு ஊறவைத்து பின்பு கழுவினால் அது விரைவில் குணமாகும்.

ஆவாரம் இலை, பூ, காய், பட்டை, வேர் இவை ஓரெ நிறையாக எடுத்து சிறுக வெட்டி அரிந்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 60 மில்லி காலை, மாலை அருந்த நீரிழிவு குணமாகும்.

அல்லது ஆவாரம் பூ, இலை, காய், பட்டை, வேர் ஒரே நிறையாக எடுத்து உலர்த்தி அருவல் நெருவலாக இடித்து தேயிலைப் பொடி போல் செய்து 8 கிராம் ஆவாரம் தேயிலை பொடிகள் 120மில்லி லீற்றர் கொதிநீரில் போட்டு கலக்கி 15 நிமிடங்கள் ஊறவிட்டு தேநீர் போல் அருந்தி வரவும் நீரிழிவு நோய் குணமாகும். பக்க விளைவுகளும் ஏற்படமாட்டாது.

ஆவாரம் பூ, ரோஜாமொட்டு ஆணைநெருஞ்சில் முன்றையும் சம அளவாக எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். 2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் எடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

ஆவாரம் பூக்களை சுத்தம் செய்து கழுவி துவரம் பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் மலச்சிக்கல் குணமாகும்.

ஆவாரம் வேர், பட்டை, கொழுந்து ஆகியவற்றை சம அளவு எடுத்து பொடி செய்து பசுநெய் மற்றும் பனை வெல்லத்துடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் மாறாத தோல் நோய்கள் படிப்படியாக குறையும். ஆவாரம் பட்டை, வேர்க்கொம்பு இரண்டையும்சம அளவு எடுத்து தண்ணீரில் (200மில்லி) போட்டுக் காய்ச்சி ஆறவைத்து தினமும் இருவேளையும் குடித்து வந்தால் கை, கால் வீக்கம் குணமாகும்.

ஆவாரம்பிசினைகாயவைத்து பொடிசெய்து தினமும் 2 கிராம் சாப்பிட்டு வந்தால் உடற்சூடு குறைசந்து நீழிரிவு கட்டுப்படும்.

ஆவாரம் பிசின், கருவேலம் பிசின் இரண்டையும் நெய் சேர்த்து வறுத்து பொடிசெய்து தினமும் 2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் தாது விருத்தி உண்டாகி உடற்பலவீனம் நீங்கும். ஆவாரம் விதைகளை எரித்து கரியாக்கி பொடி செய்து கரிசாலைச் சாற்றில் கலந்து தலையில் தடவி வநதால் இளநரை மறையும். ஆவாரம் பூ, நாவில் விதை, சிறு குறிஞ்சா மூன்றையும் சம அளவு எடுத்து பொடி செய்து தினமும் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோயில் சிறுநீர் அடிக்கடி கழிதல் குணமாகும்.

ஆவாரம் பட்டை, கொன்றைபட்டை, நாவல் விதை, கடல்ராஞ்சிபட்டை, மருதம்பட்டை இவற்றை ஒரே அளவில் கூட்டி அதற்கு 8 பங்கு நீர் விட்டு 1/8 ஆக காய்ச்சி 60 மில்லி காலை, மதியம், மாலை அருந்தினாலும் நீரிழிவு குணமாகும்.

ஆவாரம் பட்டையை குடித்து விட்டு வாய் கொப்பளித்து வந்தால்வாய் துர்நாற்றம், வாய்ப் புண் நீங்கும். எனவே நீழிவு நோயுள்ளவர்கள் ஆவார மூலிகையை ஏதோ ஒரு விதத்தில் பயன்படுத்தி வர நீரிழிவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3017

### கவிசாந்




### குசலா




### குமார்




### சாம்பவன்




### ரஜி




### கமலி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 378





**முப்பதாம் அத்தியாயம்**
**துவந்த யுத்தம்**

முடிவில்லாத ´வழியில் குதிரைகள் போய்க் கொண்டிருப்பதாக வந்தியத்தேவனுக்குத் தோன்றியது. இந்த வைஷ்ணவன் நம்மை உண்மையில் ஏமாற்றிவிட்டானா? சத்துருக்களிடம் நம்மைக் கொண்டு போய் ஒப்புவிக்கப் போகிறானா? இருபுறமும் காடுகள் அடர்ந்திருந்தன. அவற்றுக்குள் பார்த்தால் கன்னங்கரிய பயங்கரமான இருள். அந்த இருண்ட காட்டில் என்னென்ன அபாயங்கள், என்னென்ன விதத்தில் இருக்கின்றனவோ தெரியாது. சிறுத்தைகள், கரடிகள், யானைகள், விஷ ஜந்துக்கள், இவற்றுடன் பகைவர்களும் மறைந்திருக்கக் கூடும் யார் கண்டது? தெற்குத் திசையில் சோழ சைன்யம் கடைசியாகப் பிடித்திருக்கும் இடம் தம்பளை தான் என்று சொன்னார்களே? இவன் நம்மை எங்கே அழைத்துப் போகிறான்? '

நல்ல வேளையாக நிலா வெளிச்சம் கொஞ்சம் இருந்தது. சந்திர கிரணங்கள் வானுறவோங்கிய மரங்களின் உச்சியில் தவழ்ந்து விளையாடின. அதனால் ஏற்பட்ட சலன ஒளி சில சமயம் பாதையிலும் விழுந்து கொண்டிருந்தது. எதிரே மூன்று குதிரைகள் போவது சில சமயம் கண்ணுக்கு நிழல் உருவங்களாகத் தெரிந்தது. ஆனால் குதிரைகளின் குளம்புச் சத்தம் மட்டும் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

திடீரென்று வேறு சில சப்தங்கள் கேட்டன. காட்டின் நடுவில் எதிர்பார்க்க முடியாத சப்தங்கள். பல மனிதக் குரல்களின் கோலாகல சப்தம். குதூகலமாக ஆடிப்பாடும் சப்தம். ஆ! அதோ மரங்களுக்கிடையில் வெளிச்சம் தென்படுகிறது. சுளுந்துகளின் வெளிச்சத்தோடு பெரிய காளவாய் போன்ற அடுப்புகள் எரியும் வெளிச்சமும் தெரிகிறது. ஆகா! இந்தக் காட்டின் நடுவே தாவடி போட்டுக் கொண்டு குதூகலமாயிருக்கும் வீரர்கள் யார்? சோழ நாட்டு வீரர்களா? அல்லது பகைவர் படையைச் சேர்ந்த வீரர்களா?

இதைப் பற்றி வந்தியத்தேவன் மிகச் சொற்ப நேரந்தான் சிந்தித்திருப்பான். அந்தச் சிறிய நேரத்தில் முன்னால் போன குதிரைகள் சட்டென்று நின்றதையும் ஒரு குதிரை பளீர் என்று திரும்பியதையும் வந்தியத்தேவன் கவனிக்கவில்லை. திரும்பிய குதிரை முன்னோக்கி வந்து வந்தியத்தேவன் குதிரையை அணுகியது. அதன்மேலிருந்தவன் வந்தியத்தேவன் பக்கம் சட்டென்று சாய்ந்து ஓங்கி ஒரு குத்து விட்டான். அந்தக் குத்தின் அதிர்ச்சியினால் வந்தியத்தேவன் கதிகலங்கித் தடுமாறியபோது அவனுடைய ஒரு முழங்காலைப் பிடித்து ஓங்கித் தள்ளினான். வந்தியத்தேவன் தடால் என்று தரையில் விழுந்தான். வந்த வேகத்தில் அவன் குதிரை அப்பால் சிறிது தூரம் பாய்ந்து சென்று அப்புறம் நின்றது.

இதற்குள் அவனைத் தள்ளிய வீரன் குதிரையிலிருந்து கீழே குதித்து வந்தியத்தேவன் அருகில் வந்தான். திக்பிரமை கொண்டவனாய்த் தள்ளாடி எழுந்திருக்க முயன்ற வந்தியத்தேவனுடைய இடையிலிருந்த கத்தியைப் பறித்துத் தூர வீசி எறிந்தான். உடனே வந்தியத்தேவனுக்குப் புத்துயிர் வந்தது. அத்துடன் ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. ஒரு குதி குதித்து எழுந்து நின்றான். இரண்டு கையையும் இறுக மூடிக் கொண்டு வஜ்ரம் போன்ற முஷ்டியினால் தன்னைத் தள்ளிய ஆளைக் குத்தினான். குத்து வாங்கிக் கொண்டவன் சும்மா இருப்பானா? அவனும் தன் கைவரிசையைக் காட்டினான். இருவருக்குள்ளும் பிரமாதமான துவந்த யுத்தம் நடந்தது. கடோத்கஜனும் இடும்பனும் சண்டை போடுவது போல் போட்டார்கள். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குட்டி போட்ட பாத்திரம்

ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவிடம் வந்து "என் வீட்டில் குடும்ப விழா ஒன்று நடக்கிறது, புழங்குவதற்குப் போதிய பாத்திரங்கள் இல்லை உங்களிடம் இருக்கும் சொற்ப பாத்திரங்கள் இரண்டை இரவலாகக் கொடும். வேலை முடிந்ததும் திரும்பித் தந்து விடுகிறேன் " என்று கேட்டார்.

முல்லா அண்டை வீட்டுக்காரருக்கு மிகவும் பெரிய கெட்டிப் பாத்திரங்கள் இரண்டை இரவலாகக் கொடுத்தார்.

பக்கத்து வீட்டுக்காரர் ஒரு மாதிரியான நையாண்டி மனிதர். யாரையும் கேலியும் கிண்டலும் செய்து சிரிக்கச் செய்வது அவரது வழக்கம்.

முல்லாவிடம் இரவல் வாங்கி பாத்திரத்தை அவர் திருப்பிக் கொடுக்கும் போது ஏதாவது ஒரு விதத்தில் முல்லாவை நையாண்டி செய்து பார்க்க வேண்டும் என அவர் தீர்மானித்தார்.



அவர் பாத்திரங்களை திருப்பிக் கொடுக்க வந்த போது, முல்லா கொடுத்த இரண்டு பாத்திரங்கள் கூட ஒரு செம்பும் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

"நான் இந்தச் செம்பை உங்களுக்கு கொடுக்கவில்லையே?" என வியப்புடன் கேட்டார் முல்லா.

"முல்லா அவர்களே உங்களுடைய பாத்திரங்கள் என் வீட்டில் இருந்த போது இந்தச் செம்பைக் குட்டி போட்டன. அதனால் குட்டியையும் உடனே கொண்டு வந்தேன்" என்றார் அண்டை வீட்டுக்காரரர்.

சற்று யோசித்த முல்லாவுக்கு அவர் நம்மை நையாண்டி செய்வதற்காக இந்த நாடகமாடுகிறார் என்று புரிந்து கொண்டார். சந்தர்ப்பம் வாய்க்கும் போது அவருக்குச் சரியான புத்தி கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

"ஆமாம் நண்பரே பாத்திரங்களை கொடுக்கும் போது அவை கர்ப்பமாக இருக்கின்றன என்ற உண்மையைச் சொல்ல மறந்து விட்டேன் " என்று கூறியவாறு அண்டை வீட்டுக்காரர் கொடுத்த பாத்திரங்களை வாங்கிக் கொண்டார் முல்லா.

சில நாட்கள் கடந்தன. ஒரு நாள் முல்லா அண்டை வீட்டுக்காரரிடம் சென்று என் வீட்டில் ஒரு விசேஷம் புழங்குவதற்குத் தேவையான பெரிய பாத்திரம் இல்லை. தயவு செய்து பெரிய பாத்திரங்கள் இரண்டு கொடுங்கள் என்று கேட்டார். அந்த வீட்டுக்காரரும் இரண்டு பெரிய பாத்திரங்களை கொடுத்தார். முல்லா அவற்றை வீட்டுக்கு எடுத்து வந்தார்.

இரண்டு நாட்கள் கழித்து முல்லா ஒரு பாத்திரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அண்டை வீட்டுக்காரரிடம் சென்றார்.

"உங்களிடம் வாங்கிய பாத்திரம் இதோ இருக்கிறது. பெற்றுக் கொள்ளுங்கள்"? என்றார்.

"நான் இரண்டு பாத்திரம் கொடுத்தேனே ஒன்றுதான் திருப்பிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என அண்டை வீட்டுக்காரர் கேட்டார்.

முல்லா தமது முகத்தில் வருத்தம் பிரதிபலிக்க "நண்பரே ஒரு தீய நிகழ்ச்சியினைச் சொல்வதற்காக வருந்துகிறேன். தாங்கள் எனக்கு அளித்த பாத்திரங்களில் ஒன்றான பெண் பாத்திரம் கர்ப்பமாக இருந்திருக்கிறது. என் வீட்டுக்கு வந்த இரவே அது பிரசவ வேதனைப் பட ஆரம்பித்து விட்டது. துரதிர்ஷ்டவசமாக அது பிரசவித்த குழந்தையும் செத்து விட்டது. தாயும் இறந்து விட்டது. அவை இரண்டையும் தகனம் செய்து விட்டேன் " என்றார்.

முல்லா தனக்குச் சரியானபடி பதிலடி தருகிறார் என்பதைப் புரிந்து கொண்ட அண்டை வீட்டுக்காரர் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

"இனி இந்த மாதிரி உங்களை நையாண்டி செய்ய மாட்டேன். தயவு செய்து என் பாத்திரத்தைத் திருப்பித் கொடுத்து விடுங்கள் என்று வேண்டிக் கொண்டார். முல்லா அவருடைய பாத்திரத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# உழவர்களின் உளவியலை வலுவூட்டும் தைப்பொங்கல்

இன்று தைப்பொங்கல். சூரியபகவானுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு சூரியனுக்கு பொங்கல் செய்து வழிபடுகின்ற தமிழர் திருநாள் இன்று.

ஆம், ஒரு காலத்தில் உழவுத் தொழில் என்பது தமிழர்களின் முதன்மைத் தொழிலாக இருந்தது.

உழவுத் தொழில் செய்யாதவர்கள் தமிழர்கள் அல்ல என்ற நிலைமை இருந்தது மட்டுமல்ல, உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவனின் அறத்தை இம்மியும் பிசகாமல் பின்பற்றுகின்ற இனமாகத் தமிழினம் இருந்துள்ளது.

இதனாலேயே தைப்பொங்கல் என்பது தமிழர்களின் திருநாளாகப் பிரகடனமாயிற்று.

ஆக, தைப்பொங்கலானது தமது வேளாண்மைக்கு உதவிய சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் பொங்கல் செய்வது எனும் போது, அதனை விவசாயிகள் மட்டுமல்லவா கொண்டாட முடியும் என்ற கேள்வி எழுகிறது.

இப்படியானதொரு கேள்வி எழலாம் என்பதற்காகவே, தமிழர்கள் அனைவரும் இத்தரணியில் வேளாண்மை செய்து, தங்களின் உணவுத் தேவையைத் தாமே நிறைவு செய்தனர் என்ற உண்மை வெளிப்படுகிறது என்பதை ஏலவே சுட்டிக்காட்டினோம்.

இதை நாம் கூறும்போது, எல்லாக் காலங்களிலும் வேளாண்மை விளைந்ததா? இயற்கையின் ஒழுங்கீனத்தால் வேளாண்மையில் நட்டம் ஏற்படவில்லையா? அவ்வாறு வேளாண்மை விளைச்சல் தராத போது, சூரியனுக்குப் பொங்கிப் படைப்பதன் நோக்கம் யாது? என்று வினவுவதில் தவறில்லை.

இங்குதான் தமிழர்களின் உயர்ந்த உளநலத் தத்துவம் வெளிப்படுகிறது.

ஆம், ஆண்டு தோறும் வேளாண்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் நட்டம் அடைவதற்கான சந்தர்ப்பம் அதிகம்.

அவ்வாறு நட்டமடையும் போது உளம் சோர்ந்து, வேளாண்செய்கையில் இருந்து விலகிவிடலாம் என்றதொரு தீர்மானத்தை விவசாயிகள் எடுக்கலாம்.

அவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்படுமாயின், இந்த உலக மக்கள் உணவுக்கு வழியின்றி வாழ முடியாமல் போகும்.

ஆகையால், ஆண்டு தோறும்; விவசாயிகளின் உளம் சோராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களின் உளம் வலுப்படுத்தப்பட வேண்டும்.

இதனை தானியங்கள் விளைந்து அறுவடை செய்யக்கூடிய தை மாதத்தில் செய்வதுதான் பொருத்தம் என்று கணித்த நம் மூதாதையர்கள், தை மாதம் முதலாம் திகதி சூரியபகவானுக்குப் பொங்கல் செய்து, தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையை நம் அனைவரிடமும் ஏற்படுத்தினர்.

நம்பிக்கைதான் வாழ்க்கை என்ற தத்துவத்தைத் தருவதும் இத்தைப்பொங்கல் என்பது உணர்தற்குரியது.

# நன்றியோடு அறச் சிந்தனையையும் போதிக்கின்ற தைப்பொங்கல் திருநாள்

## இந்துக் குருமார் அமைப்பு வாழ்த்து

அனைத்து மக்களுக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்ளை தெரிவித்துக் கொள்வதில் இந்துக் குருமார் அமைப்பு மகிழ்வடைவதாக அதன் தலைவர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள், அமைப்பின் செயலாளர் சிவஸ்ரீ ச.சாந்ரூபக்குருக்கள் ஆகியோர் கூட்டாக விடுத்த பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அவ் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களின் அறுவடைப்பண்டிகை விழாவாக, உழவர் திருநாளாக, தைத்திருநாள் காணப்படுகிறது.

சமய ரீதியாக நாம் பார்க்கும் போது எம்மிடம் இல்லாதது எதுவும் இல்லை. வாழ்வியலின் அடிப்படைகளாக சமய நெறி காணப்படுகிறது. அன்பினையும்பண்பினையும் நன்றிகள் பகிர்ந்து கொள்ளும் பாங்கினையும் அறச்சிந்தனைகளுடன் தர்மத்தினை போதித்து நிற்கிறது.

இவ்வகையில் தான் உழவர் பெருமக்கள் சூரிய பகவானுக்கும் தொடர்ந்து விவசாயத்திற்கு உதவிய கால்நடைகளுக்கும் நன்றிகள் பகிர்ந்து கொள்ளும் பாங்கினையும் உணர்த்துவதாக காணப்படுகிறது.

எமது சங்க இலக்கியங்களான

"தைஇத் திங்கள் தண்கயம் படியும்" என்று நற்றிணையிலும்

"தைஇத் திங்கள் தண்ணிய தரினும்" என்று குறுந்தொகையிலும்

""தைஇத் திங்கள் தண்கயம் போல்" என்று புறநானூற்றிலும்

"தைஇத் திங்கள் தண்கயம் போல" என்று ஐங்குறுநூற்றிலும்

"தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ" என்று கலித்தொகையிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

இத்தருணத்தில் அனைத்து மக்களும் வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ அன்பே உருவான பரம் பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகின்றோம். (ந-7)

# லசந்த மற்றும் வசீம் தாஜுதீனை கொலை செய்தவர்கள் யார் என்று தெரியும்

## முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா பரபரப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க மற்றும் றக்பி வீரர் வசீம் தாஜுதீன் ஆகியோரைக்கொலை செய்தது யார்? என்பது தனக்கு தெரியும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

உரிய நேரம் வரும் போது இந்த விடயங்களைப் பகிரங்கப்படுத்துவேன் எனவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், சிரச தொலைக் காட்சி வலையமைப்பு மீதான தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது தமக்குத் தெரியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தி சண்டே லீடர் பத்திரிகை மற்றும் லீடர் பப்ளிகேஷன்ஸின் ஸ்தாபகரான லசந்த விக்கிரமதுங்க, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்திருந்தார்.

அத்துடன், அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுடன் சட்டப் போரில் ஈடுபட்டிருந்தார். இந் நிலையில், 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் லசந்த விக்ரமதுங்க சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேபோல், பிரபல றக்பி வீரர் தாஜுதீன் கார் விபத்தில் உயிரிழந்தார். இது முதலில் விபத்து என்று கூறப்பட்டது. எனினும், பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அது கொலையென தெரிய வந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# பொங்கல் பொதி வழங்கி வைப்பு

(நாவற்குழி)

நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் சுவிஸ்லாந்து சிவா கப்பல் பொதிச் சேவை உரிமையாளர் கா.சிவகுமாரின் அனுசரணையில் நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 130 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் சுமார் 75 குடும்பங்களுக்கு புத்தாடைப்பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (7)

# நீதியரசர்களை பரிந்துரைக்க தயக்கம் காட்டும் ஜனாதிபதி

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கான நான்கு நீதியரசர் பதவிகளுக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ள போதிலும் இதுவரை அந்தப் பதவிகளுக்குத் தகுதியான எவரும் நியமிக்கப்படவில்லை.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் புவனேக அலுவிவகாரவுக்குப் பதிலாக உயர்நீதிமன்ற நீதியரசராக இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

அத்துடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களாக கடமையாற்றிய பிரசாந்த சில்வா, என்.டீ.கீர்த்திசிங்க, நில் இத்தவெல ஆகியோர் ஓய்வுபெற்ற பின்னர், அந்த வெற்றிடங்களுக்கு இதுவரை நீதியரசர்கள் நியமிக்கப்படவில்லை.

இப் பதவிகளுக்குத் தகுதியான நபர்களின் பெயர்களை ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவைக்கு பரிந்துரைக்க வேண்டும்.

ஜனாதிபதி தனது பரிந்துரையை அனுப்பிய பின்னர், சட்ட ரீதியாகப் புதிய நியமனங்கள் வழங்கப்படும்.

எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவரை தனது பரிந்துரைகளை அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்பி வைக்கவில்லை எனத் தெரியவருகிறது. (ந-7)

# 'அனைவருக்கும் வீடு' திட்டத்தில் 15000 வீட்டுக் கடன்கள்

'அனைவருக்கும் வீடு' திட்டத்தின் கீழ் 15,000 புதிய வீட்டுக் கடன்கள் வழங்கும் பணிகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீடு திருத்த வேலைகளுக்காக இந்த வீட்டுக் கடன்கள் வழங்கப்படும் என அதன் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக பயனாளிகளுக்கு இந்த வீட்டுக்கடன்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களின் பணிப்புரைக்கு அமைய இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்த ஆண்டு வீடமைப்பு அபிவிருத்திக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு 7,650 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (நி)

# கடலில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு

(அம்பாந்தோட்டை)

கடலில் நீராடச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக அம்பாந்தோட்டை துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாந்தோட்டை தர்மபால மாவத்தையைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)

11

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஜாதிக ஜன சபையின் தீர்மானங்கள் மற்றும் பிரகடனங்களை நிறைவேற்றியதும் பின்னர் கையொப்பம் இடுவது மற்றும் அதை உறுதிப்படுத்துவது. ஜாதிக ஜன சபையின் தீர்மானங்கள் மற்றும் பிரகடனங்களை சபாநாயகர் ஊடாக பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருதல். பாராளுமன்றத்திற்கும் ஜாதிக ஜனசபைக்கும் இடையில் சரியான ஒருங்கிணைப்பை பேணுதல். இவை யாவும் ஜாதிக ஜன சபைத் தலைவரின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களுக்குள் அடங்குகின்றன.

### ஜாதிக ஜன சபையின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்

பாராளுமன்றத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மக்களின் இறையாண்மையை வலுப்படுத்த சபை மற்றும் மக்கள் நடுவர் மன்றம் வடிவில் செயற்படுதல். ஜாதிக ஜன சபை ஒவ்வொரு மாதமும் ஒரு நாளாவது கூட்டப்பட வேண்டும்.

ஊழலை ஒழிப்பதற்கும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும் பொதுத்துறையின் செயற்றிறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் புதுமைகளை முன்மொழிவதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பளித்தல்.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ஒரு குறிப்பிட்ட விடயத்தில் ஜாதிக ஜன சபையின் கருத்தைப் பெற விரும்புகிறார் என்றால், அதன்படி ஜாதிக ஜன சபையின் தலைவருக்கு அறிவித்தால், ஜாதிக ஜன சபையின் தலைவர் சபையை அவசரமாக கூட்டலாம். மேலும், அவசர சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் போது, சபாநாயகர் ஜாதிக ஜனசபையின் தலைவருக்கு அது குறித்து அறிவிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விசேட சட்டமூலங்களுக்கான அவதானிப்புகளை வழங்குதல்.

புதிய மசோதாக்கள் பற்றிய முன்மொழிவுகளை பாராளுமன்றத்திற்கு வழங்குதல்.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய கேள்விகளை சபாநாயகர் ஊடாக ஜாதிக ஜன சபைத் தலைவர் சமர்ப்பித்தல்.

வெளிநாட்டு ஒப்பந்தங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிற கொள்கை முன்மொழிவுகள் பற்றிய அவதானிப்புகளை வழங்குதல்.

### ஜாதிக ஜன சபை செயலகம் பற்றிய மேலதிக தெளிவுபடுத்தல்

இது முழு சுதந்திரமான அமைப்பாக நிறுவப்பட உள்ளது. உத்தேச ஜன சபையை நிறுவுவதற்கு முன்னர், அமைச்சரவைப் பத்திரம் மூலம் ஜாதிக ஜன சபை செயலகம் நிறுவப்பட வேண்டும். பின்னர் ஜனசபா சட்டத்தின் மூலம் அரசியலமைப்பு ரீதியாக நிறுவனத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. (இது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை).

ஜன சபையை நிறுவிய பிறகு, அது அவர்களின் செயற்பாடுகள் முறையாக செயற்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணித்து மேற்பார்வையிட வேண்டும். ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் பிற செயற்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மூலம் மேம்பாடுகளை பரிந்துரைக்க வேண்டும்.

அதன்படி, உத்தேச ஜன சபையை நிறுவுவதற்கு முன்னதாக ஜனசபா செயலகத்தை ஸ்தாபிப்பதை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். (தற்போது இது நிறுவப்பட்டுள்ளது).

### ஜாதிக ஜன சபை செயலகத்தின் கடமைகள் மற்றும் அதிகாரங்கள்

ஜன சபையை உருவாக்குவதற்கு முன்னர் சட்டத்தை தயாரிப்பதற்காக முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுடன் கூடிய பூர்வாங்க கருத்துருவின் அடிப்படையில் பல்வேறு தரப்பினருடன் மேலும் விவாதங்களை நடத்தி சட்டத்தை தயாரித்தல்.

சட்டத்தின்படி ஜன சபையை ஸ்தாபிப்பது தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல், சட்டத்தை உருவாக்கி, அமைச்சரவையின் ஊடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதற்கேற்ப ஜன சபை சட்டத்தை நிறைவேற்றுதல்.

ஜன சபை உருவான பிறகு, ஜன சபையின் செயற்பாடுகளை சரியான முறையில் கண்காணித்து, மறுஆய்வு செய்வதன் மூலம் பலவீனங்களை போக்க சம்பந்தப்பட்ட பிரிவுகளை வழிநடத்துதல்.

ஜன சபை அமைப்பை வலுப்படுத்த தேவையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது.

ஜன சபை [illegible] தற்குத் தேவையான வசதிகளை வழங்குதல், ஜன சபை அமைப்பைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், அரசியல் கட்சி அமைப்பிலிருந்து ஜனசபையை சுயாதீனமாகப் பராமரித்தல், சுதந்திரத்தைப் பாதுகாத்தல் மற்றும் உயரடுக்கின் ஆதிக்கத்தில் இருந்து தடுப்பது (ஜன சபையைத் தடுத்தல்) ஆகிய உப அளவுருக்களை வழங்குதல். (அந்தந்த பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும்போது உயரடுக்கு எந்த வடிவத்திலும் ஆதிக்கம் செலுத்துவதிலிருந்து தடுத்தல்).

இந்த செயல்முறையை மேம்படுத்துவதற்காக சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகொள்வது. டிஜிட்டல் மயமாக்கல் மூலம் சபைகளின் பணிகளை மிகவும் திறம்பட செய்ய தேவையான வசதிகளை முன்மொழிதல் மற்றும் அறிமுகப்படுத்துதல். கிராமிய ஜன சபையின் செயலாளர்களின் பயிற்சி, மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு, வரவிருக்கும் சட்டத்தின் மூலம் ஜாதிக ஜன சபை செயலாளருக்கு நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல், ஜாதிக ஜன சபையின் காரியங்களுக்கு தேவையான நிர்வாக உதவிகளை வழங்குதல்.

### ஜாதிக ஜன சபை செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய முன்னோடி திட்டங்கள்

ஜனசபை அமைப்பை முறையாக நிறுவுவதற்கு ஜனசபா சட்டத்தை தயாரிப்பதற்கு முன், எண்ணக் கருத்தறிக்கையின் நடைமுறைப் பயன்பாட்டை அனுபவிப்பதற்காக ஜாதிக ஜன சபை செயலகம் முன்னோடி திட்டங்களை ஒழுங்கமைப்பது அவசியம்.

இதன்படி, 25 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 25 பிரதேச செயலகப் பிரிவுகளில் 'கிராமிய ஜன சபை அமைப்பின்' சோதனைக்கான முன்னோடித் திட்டங்களை ஏற்பாடு செய்வது பொருத்தமானது.

அந்த முன்னோடி திட்டங்களின் அனுபவத்தின் அடிப்படையில், இந்த பூர்வாங்க கருத்தாக்கத்தை மேலும் உருவாக்க ஒரு வாய்ப்பு உள்ளது. மேலும், ஜாதிக ஜன சபை செயலகம் கிராமிய ஜன சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய் வதற்கான சோதனைத் திட்டங்களை சீரற்ற மாதிரி முறை மூலம் நடைமுறைப்படுத்தலாம்.

### சுருக்கம்

ஜனசபையில் தயாரிக்கப்பட்ட [illegible] பூர்வாங்க கருத்துருவின் அடிப்படையில், பல்வேறு நிபுணத்துவ தொழில்முறை சமூகங்கள் மற்றும் இந்த விடயத்தில் ஆர்வமுள்ள குழுக்களின் பங்கேற்புடன் பல சுற்று விவாதங்களை நடத்தி, ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரின் கருத்துகளின் அடிப்படையிலும் மற்றும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வைத்த பூர்வாங்க எண்ணக் கருத்துத் தாளைத் திருத்தியதன் மூலம் இந்த முன்மொழிவு மிகவும் நடைமுறை முன்மொழிவாக முன்வைக்கப்படுகிறது.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் ஒரு ஜன சபையை நிறுவவும் கிராமத்திற்குள் ஒரு தலைவர் மற்றும் குழுவை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடிப்படையில் எவ்வித புறக்கணிப்பும் இன்றி, குழுக்களில் இருந்து இளைஞர்கள், பெண்கள் மற்றும் முதியோர்களின் பிரதிநிதித்துவத்தை முறையாக உறுதி செய்து, ஜாதிக ஜன சபையை கூட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், 75% உறுப்பினர்கள் கிராமப்புறக் குழு உறுப்பினர்களிடமிருந்து அங்கொன்று இங்கொன்றான முறையிலும் மீதமுள்ள 25% பேர் தொழில் வல்லுநர்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் தேசிய அளவிலான சிவில் மற்றும் அரசியல் ஆர்வலர்களிடமிருந்து அங்கொன்று இங்கொன்றான முறையிலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இந்த ஜாதிக ஜன சபையின் மூலம் தேசிய அளவிலான கொள்கை உருவாக்கத்தில் தீவிரமான பொது மக்களின் பங்களிப்பை ஏற்படுத்த முடியும். ஜாதிக ஜன சபையின் கருத்துக்களை பாராளுமன்ற துறை சார் கண்காணிப்புக் குழுக்களுக்கு ஜாதிக ஜன சபையின் தலைவரால் அனுப்பி வைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

மிகவும் சுறுசுறுப்பான பொதுப் பங்கேற்பின் மூலம் நிலையான அரசாங்கக் கொள்கைகளை உருவாக்கும் செயல்முறையை நிறுவுவதற்கும் அதன் மூலம் கூறப்பட்ட அரசாங்கக் கொள்கைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு செயலில் உள்ள சமூக குடிமக்களின் பங்களிப்பை உருவாக்குவதற்கும் இது எதிர்பார்க்கப்படுகிறது.

**"உங்கள் கிராம எழுச்சி உங்கள்கையில்"**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள்...

தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்தால் இந்த நாட்டில் மூவின மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அதில் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்துக்கு நாம் முடிவுகட்டிய பின்னர், தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள். ஆனால், அவர்களை வைத்துக் கொண்டு இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளும் வெளிநாடுகளில் வாழும் புலிகளின் ஆதரவாளர்களும் சுயலாப அரசியலை நடத்துகின்றனர்.

இது கவலையை ஏற்படுத்தும் விடயம். அவர்கள், தமிழ் மக்கள் மீது போராட்ட சிந்தனையைத் தூண்டினாலும் அந்த மக்கள் மீண்டும் போரை விரும்பவில்லை. நிம்மதியான வாழ்க்கையே அவர்களின் விருப்பம். அதை நாம் அவர்களுக்கு 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தவுடன் ஏற்படுத்திக் கொடுத்து விட்டோம்.

வடக்கு - கிழக்கில் ராஜபக்ஷக்களை ஆதரிக்கும் தமிழ் உறவுகள் பலர் உள்ளனர். அவர்களுக்கு நாம் என்றும் நன்றி கூறுவோம். எதிர்வரும் தேர்தல்களில் வடக்கு - கிழக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்படாது. வழமை போன்று எமக்குரிய வாக்குகள் கிடைக்கும். மொட்டுக் கட்சியின் வெற்றியில் தமிழ் மக்களின் பங்களிப்பும் முக்கிய இடம் வகிக்கும்" என்றார். (ந-7)

## கால்வாய்க்குள்...

இரண்டு தலைக் கவசங்களும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கிடப்பதை அவதானித்த பொதுமக்கள் கிளிநொச்சிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அதனடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், கிளிநொச்சி மாவட்ட நீதவான் பி.ஆர். ஜெமில் முன்னிலையில் நீர்ப்பாசன கால்வாயிலிருந்து இரண்டு இளைஞர்களின் சடலங்களையும் மீட்டுள்ளனர்.

மேற்படி இளைஞர்கள் ஓட்டிச் சென்ற மோ.சைக்கிள், கட்டுப்பாட்டை இழந்து கால்வாய்க்குள் வீழ்ந்திருக்கலாம் எனவும், அதனால் இந்த மரணம் சம்பவித்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

இதில் கிளிநொச்சி, கல்மடு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய தயாளன் தனுசன், அழகாபுரி பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய கிருஸ்ணன் சதீசன் ஆகிய இரு இளைஞர்களே சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இந்நிலையில், சடலங்களைப் பார்வையிட்ட நீதவான் அவற்றை பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். (ந-7,315,316)

## தேசிய நல்லி...

வாழ் உறவுகளின் அனுசரணையுடன் நடைபெறும் தேசிய நல்லிணக்கப் பொங்கல் விழாவில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில் இடம் பெறும் இவ்விழாவில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஆசிரியர்...

திய வேளை அவரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க அம்பாறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ந-7)

## வட மாகாண...

யாழுக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் குழு, வர்த்தகப் பிரதிநிதிகள், சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் பிரதிநிதிகள் என பலரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், கால நிலை மாற்றம் , வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகளை வழங்குவதில் காணப்படும் சிக்கல்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து வடமாகாண ஆளுநர், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தினார். (ந-7,33)

## பால்மா...

னாலும் ஒரு கிலோகிராம் பால் மாவின் விலை 75 ரூபாயினாலும் அதிகரிக்கப்படும்.

18% வரை வற்வரி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக, சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்தார்.

இப்புதிய விலை இவ்வார நடுப் பகுதியில் இருந்து அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-நி)

## பௌத்தத்தை...

கமைக்கப்பட்ட குழுக்களுக்கு எதிராகச் சட்டத்தினை அமுல்படுத்துமாறும் பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் கூட்டாக இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

பௌத்த மதத்தை அழிக்க முற்படும் நபர்களின் செயற்பாடுகளை வெறும் சம்பவங்களாகக் கருத முடியாது.

பௌத்த மதத்தின் உன்னத சித்தாந்தத்தை சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நிகழ்வுகளை தடுப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை தயார் செய்ய வேண்டிய தருணம் இது வாகும்.

அத்துடன் சமூக ஊடகங்களில் முறையற்ற கருத்துக்களை பரப்பி பௌத்த சமூகத்தை தவறாக வழிநடத்தி சமூகச்சீர்கேட்டை ஏற்படுத்த முயற்சிக்கும் நபர் களுக்கு எதிராகவும் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை உடனடியாக தயாரிக்க வேண்டும்.

'புத்தசாசனத்தின் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கு" உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்எனவும் ஜனாதிபதியிடம் மகாநாயக்க தேரர்கள் குறித்த கடிதம் வாயிலாக கோரியுள்ளனர். (ந-7)

## பட்டிப்...

பின் சார்பில் தென் கயிலை ஆதீன தவத்திரு. அகத்தியர் அடிகளார் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தச் செய்தி குறிப்பில், மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் அத்துமீறி குடியேறவும் பயிர் செய்யவும் முனையும் ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ச்சியாக, அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் பசுக்களுக்கும் காளைகளுக்கும் சொல்லொணாத் துயரங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

குறிப்பிட்ட செயற்பாட்டை கண்டித்து பசுக்களிற்கும் காளைகளிற்கும் பொங்கலிட்டு நன்றி செலுத்தும் உயரிய நாளான பட்டிப் பொங்கலன்று அனைவரும் எமது உணர்வுகளை வெளிக்காட்ட; சொல்லொணத் துயரைச் சந்தித்துள்ள பசுக்களைச் காத்திட; யாழ்.நல்லை ஆதீன முன்றலில் பட்டிப் பொங்கலான நாளை மாலை 5 மணிக்கு, ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் கவனயீர்ப்பில் பங்குகொண்டு கிழக்கின் மயிலத்தமடுவில் தொடர்ச்சியாக நடைபெறும் போராட்டங்கள் வெற்றி பெற வலுச்சேர்க்குமாறு வேண்டுகின்றோம் என்றுள்ளது. (ந-7,33)

லக்கி 7 VIP
திகதி 2024.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 0185
E 1 8 6 7 6 2 E
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1389
T 16 31 40 81 T
19198

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3601
சீட்டிழுப்பு திகதி 14.01.2024
D 18 24 27 70
D 99358
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 0668
விருச்சிகம் 03 19 27 61 விருச்சிகம்
31001 05

மஹஜன சம்பத
திகதி 2024/01/14
சீட்டிழுப்பு இலக்கம் 5359
K 2 5 7 0 8 0
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1707
K 19 06 52 69 75
44322

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2159
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2024.01.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,541,447.20
வெற்றி இலக்கங்கள் 16 29 69 70 T
498413
DLB www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.01.2024 வெற்றி வாரம் 067
M 4 0 9 7 8 5
செகண்ட் சான்ஸ் விசேட இல. 43777
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,375,655.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2333 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.14 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 25 29 52 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,959,533.60
68096

சனிதா
திகதி 2024.01.14 வெற்றி வாரம் 4494
வெற்றி இலக்கங்கள் 20 30 31 73 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,026,051.20
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 100,000/- பணப்பரிசு 1 4 8 8 8


சசிரி
வெற்றி வாரம் 428
சீட்டிழுப்பு திகதி 2024.01.14
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 06 37 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,422;760/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4045 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.01.14 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 07 35 46 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,174,082.40
356983

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 11 05 12 46 61
சுப்பர் இலக்கம்
1509
மஞ்சள்
14.01.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 492,431,266.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GRAND
Opening
Invitation



SMART TECH SOLUTION
Since 2009

MONDAY JAN 15 2024
2.00 p.m ONWARDS

- உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும்.
- சிறந்த வாடிக்கையாளர் சேவை, அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள்,
- CCTV Installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

**Our Services:** CCTV Sales & Installation I Alarm System I Door Lock I Fingerprint Attendance
Electric Fence I Local Networking
Computer Repair & Maintenance
Software Development

CCTV பொருத்துநர்களுக்கும்
விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

Contact Us for More Information
+94 77 684 3023
(18634)
+94 71 684 3023 | +94 21 221 3023
No.282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

RJ மஹால் புதிய சலுகைகளுடன்
இனிய தைப்பொங்கல் திருநாளை வாழ்த்தி வரவேற்கிறது.

RJ மஹால்
திருமண மண்டபம்



RJ மஹாலின் 50% விலைக்கழிவு
14.06.2024 இற்கு முன்
முற்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே
ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்



உங்கள் வைபவங்களுக்கு நீங்கள் விரும்பிய வகையில்
உணவுகளை உங்கள் இடத்திற்கே பெற்றுக்கொள்ள முடியும்
(Catering Orders)
தேனிலவு அதிசொகுசு குளிரூட்டப்பட்ட அறைகளுக்கு
50% விலைக்கழிவு
பல்லாக்கு 50% விலைக்கழிவு
ராதை விளக்குக்கு 50% விலைக்கழிவு
எமது ஏனைய சேவைகள்
அதிசொகுசு அறைகள், பூங்கா வைபவங்கள்
(Garden party)
மேற்தள வைபவங்கள் (RoofTop), கலாச்சார நிகழ்வுகள்,
ஒன்றுகூடல் நிகழ்வுகள்

RJ மஹாலின் 5வது வருட நிறைவை முன்னிட்டும்
மங்களகரமாக 2024ஆம் ஆண்டினை வரவேற்கும் முகமாகவும்
கிளிநொச்சி மக்கள் அனைவரும் பயன்பெறும் நோக்கில்
RJ மஹால் வழங்கும் மாபெரும் ஆச்சரிய சலுகை!

இவை அனைத்தும்
முற்றிலும்
இலவசம்

இச்சலுகையானது திருமண விழா மற்றும்
பூப்புனித நீராட்டுவிழாக்களுக்கு மட்டுமே...!
அத்துடன் எமது 6ஆம் ஆண்டு நிறைவான
14.06.2024 இற்கு முன் முற்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே
இச்சலுகை

☆ கும்பம், ☆ வாழைமரம்,
☆ குளிரூட்டப்பட்ட திருமண மண்டபம் (4 மணித்தியாலம்),
☆ ஐயர், ☆ ஒரு மேளம், ☆ ஒரு நாதஸ்வரம்,
☆ நிலையான மணவறை, ☆ குதிரை மற்றும் குதிரை உறை,
☆ குளிரூட்டப்பட்ட மணப்பெண் அலங்கார அறை,
☆ சேவைக்கட்டணம், ☆ ஒலி, ஒளி அமைப்பு.

உணவுக் கட்டணம்
மட்டுமே செலுத்த வேண்டும்
மீதி அனைத்தும் இலவசம்
ஒருவருக்கு 1000/= இல் இருந்து....
நிபந்தனைக்குட்பட்டது

350க்கு மேற்பட்ட நபர்களுக்கு முற்பதிவு செய்யும் விழாக்களுக்கு மட்டுமே மேற்குறித்த இலவச சலுகைகள்
350க்கு கீழ்ப்பட்ட நபர்களுக்கு முற்பதிவு செய்யும் விழாக்களுக்கு மேற்குறித்த இலவச சலுகைகளில் 50% கட்டணம் மட்டுமே

(18613)



தொடர்புகளுக்கு: 077 231 5521

தொடர்புகளுக்கு: 021 228 0555 / 077 231 5521
160வது மைல்கல், A9 வீதி, பரந்தன்.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org